500 Business Cards - Only $25
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும்...
1345 Morningside ave #8, Scarborough Tel:416-284-9545

இருளிலிருந்து ஒளிக்கு...
# பூபாளம்
www.boobalam.com

Dental Clinic
Dr. Iru VIJAYANATHAN, BDS, MFDS, FAGD
General Dental Practitioner
3150 Eglinton Ave East, Scarborough (Markham & Eglinton) 416.264.3232
3151 Markham Road # 129, Scarborough (Markham & Steeles) 416.609.2022

12 ஐப்பசி 2012, 10,000 பிரதிகள் இதழ் 6

## கூட்டமைப்புள் குமைச்சலா?

# நெருப்பின்றிப் புகைச்சலா..?

மனுதர்மன்



மழையோடும் வெயிலோடும் மனம் போல் நடந்தான்... (பக்கம் 8)

நெருப்பின்றிப் புகையாதென்பர். நாம் புகையைக் கண்டோம் - அறிக்கை வடிவில். அதுவும் பகிரங்கக் கடிதமாக, தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழர் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளான டெலோ, ஈபிஆர்எல்எப், புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்கள் கையொப்பமிட்ட கடிதமாக.

யாருக்கு இந்தப் பகிரங்கக் கடிதம்? ஜனாதிபதிக்கா, இந்தியாவுக்கா, அமெரிக்காவுக்கா, அல்லது வேறொரு கட்சிக்கா..? இல்லை, அது தங்களுக்குள்ளேயேதான். தங்கள் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தர் ஐயாவுக்கேதான். என்ன, உள் வீட்டுக்குள் பேசுகிற விடயத்துக்கு பத்திரிகை வாயிலாக பகிரங்கக் கடிதமா..? எங்கோ உதைக்கவில்லை..? ஒரு புகைச்சல் ஒன்று மணக்கவில்லை..?

இப்படியான பகிரங்கக் கடிதத்துக்கு, -உள்ளே பேசுவதையும் வெளியே சொல்வதற்கு- அரசியல் ரீதியில் ஒரு நோக்கம் இருக்கிறது. அதாவது, பின்னாளில் கட்சி பிளவுற நேர்ந்தால், அல்லது தம்மைக் கட்சியை விட்டு நீக்கிவிட நேர்ந்தால், தாம் முன்கூட்டியே கொண்டிருந்த நிலைப்பாடு இவைதான் என்பதைப் பகிரங்கத்தில் பதிவு செய்து வைத்துவிடுவது.

அப்படியானால் விவகாரம் முத்திவிட்டது என்பது அர்த்தம். அந்த விவகாரம்தான் என்ன என்பதுதான் நமக்கு இப்போ வேண்டிய விஷயம்.

கடிதம் கூறுவது ஒன்றைத்தான். “சம்பந்தர் ஐயா அவர்களே, கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்யுங்கள்!”

இப்படிக் கேட்டுக்கொண்டு அவர்கள் சுட்டுவது பல விடயங்களை. - கூட்டமைப்பை

தொடர்ச்சி 2ம் பக்கம்

THE COURIER SOURCE
Toronto விலிருந்து உலகின் எப்பாகத்திற்கும்...
இலங்கை, இந்தியாவிலிருந்து Torontoவிற்கும்...
International
- Worldwide Express
- Worldwide Economy
- Air Fright/ Sea Freight
- Export & Import
Local & Nationwide
- Overnight Services
- Same Day Services
- Direct Drive
905.761.7979
24/7
8600 Keele St, Unit #10, Concord, ON, L4K 4H8
Sales@thecouriersource.com
www.thecouriersource.com

JUDE ANTHONYPILLAI LL.B.
Barrister, Solicitor & Notary Public
JUDE ANTHONYPILLAI PROFESSIONAL CORPORATION
Tel: 416.332.8547
Fax: 416.332.8379
Email: judelawoffice@rogers.com
Your questions answered! Your options explained!
2390 Eglinton Ave.East, Suite 250, Scarborough, ON. M1K 2P5

Nickes Fancy
நிகேஷ் பான்ஷி
Gents & Ladies Readymade Gurments, Sarees, Salwar Kameez, Children Wears, Books & Gift Items
462 Jean Talon West, Montreal, QC. H31 1R3
514.495.375, 514-270.81.81



பூபாளத்தில் விளம்பரம் செய்ய
Tel: 416.284.4004
e-mail: boobalam@ymail.com



"Make Your Dream Home Come True"
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

Keeth Appliance & Heating, Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation, Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves
Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth Repair Technician 647.768.4143

Ideal Escape Vacation Ltd.
Toronto - Sri Lanka (Return) $850 + tax $450
Toronto - India (Return) $1000 + tax $290
Tel: 416-841-1833
Cell: 647-739-7482
Fax: 647-847-7552
Ideal Escape Vacation Ltd. GTA Square Mall
5215, Finch Ave. E, Unit #160, Toronto, ON. M1S 0C2
www.idealescape.ca | E-mail: idealescape@gmail.com

# கூட்டமைப்புக்குள் குமைச்சலா?...



கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவதே இன்றைய காலத்தின் தேவை, அதைப் பதிவு செய்யும்படி நாம் பலமுறை கோரினோம், பதிவதற்கு விண்ணப்பித்தும் 15 மாதங்களாக தமிழரசுக் கட்சிமட்டும் ஒப்புதல் கடிதம் கொடாமையால் நிராகரிக்கப்பட்டது, அதற்கு அங்கத்துவக் கட்சியொன்று பெயர் மாற்றத் தேவையாயிருந்தால் அதைக் கூட நாம் செய்யத் தயாராக இருந்தோம், நாம் நான்கு கட்சிகளும் கூடி பதிவுசெய்யும்படி இதற்கு முன் அனுப்பிய கடிதத்துக்கும் உங்களிடமிருந்து சாதகமான பதிலில்லை, இப்போது கூட்டமைப்புக்கான அரசியல் யாப்பை வரைய உத்தேசித்துள்ளோம், எனினும் உங்கள் தலைமையில் தொடர்ந்து செயற்படச் சித்தமாகவே உள்ளோம், கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் முடிந்துவிட்டதால் இனியும் சுணங்கக் காரணமில்லை - ஆயினும் நீங்கள் பதிய முன்வருகிறீர்களில்லை.

இவ்வளவற்றையும் தெரிவிக்கும் இக் கடிதம் ஏன் பகிரங்கமாக வெளியிடப் படுகிறது என்பதை மட்டும் தெரிவிக்கவில்லை. ஆனால், தாம் எவ்வளவோ முயன்றும், எதுவும் பலனளிக்காததால்தான் இக் கடிதத்தைப் பகிரங்கமாக வெளியிடவேண்டியுள்ளது என்பதை வாசகர்களுக்குப் புரியவைக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.




உண்மையில் இது சம்பந்தர் ஐயாவுக்கு எழுதப்பட்ட கடிதமே அல்ல, வாசகர்களுக்கு எழுதப்பட்ட கடிதம்தான்! இப்படிப் பகிரங்கமாகக் கடிதத்தைப் படித்து சம்பந்தர் ஐயா விசனமடைவாரா அல்லது மனமாற்றமடைவாரா என்பது குழந்தைக்கும் புரியும் - ஆக, இப் பதிவுக்கு அவரை இணங்கவைப்பதற்கான ஒரு மக்கள் அழுத்தத்தை ஏற்படுத்துவது அல்லது அம்பலப்படுத்துவது நோக்கமாக இருக்கலாம்.

இப்போது அடுத்த கேள்வி இயல்பாகவே எமக்கு எழுகிறது. ஏன் சம்பந்தர் கூட்டமைப்பைப் பதிவதற்குத் தயங்குகிறார்?

இதை ஏனென்று புரிந்துகொள்வதற்கு எவரும் மூளையைக் கசக்கவேண்டிய தேவையே இல்லை. தமிழரசுக் கட்சியின் சின்னத்திலேயே மொத்தக் கூட்டமைப்பும் தேர்தல் கேட்கிறது, தமிழரசுக் கட்சிச் செயலாளரே மொத்தக் கூட்டமைப்புக்கும் செயலாளர்போல் வேட்பாளர்களை நியமிக்கும் அதிகாரம் கொண்டிருக்கிறார். யார்தான் அதை மாற்றியமைக்க விரும்புவார்?

உடனடியாக, கூட்டமைப்புக்குள் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் ஓரங்கட்டப்பட்டு, தேர்தல் வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டனர். இதனால் விசனமடைந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி, சிவாஜிலிங்கம் போன்றோர் பிரிந்துபோய் இவர்களை எதிர்த்துத் தனித்து நின்று போட்டியிட்டு, படுதோல்வியடைந்தனர். அவர்களின் தோல்வியானது, வெளிநாட்டுத் தமிழரின் ஆதரவு சரிந்துவிடும் என்ற அச்சத்தையும் கூட்டமைப்பின் தலைமைக்கு இல்லாதாக்கி விட்டது.

புலிகளின் மறைவுக்குப் பின்னர், கூட்டமைப்புக்கு யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்ற ஒரு "சுதந்திரம்" கிடைத்தது. அதன் அதிகாரபூர்வமான தலைமை மறைமுகமாக அதற்குச் சின்னத்தை வழங்கியிருந்த தழிழரசுக் கட்சியின் கைகளுக்கு வந்தது.



இந்த அளவில் நாம் புகைக்குப் பின்னால் ஏதோ நெருப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்கிறோம். அந்த நெருப்பு என்ன என்பதை அறிந்துகொள்வதே எமக்கு அடுத்துள்ள விடயம்.

புலிகளின் மறைவுக்குப் பின்னர், கூட்டமைப்புக்கு யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்ற ஒரு "சுதந்திரம்" கிடைத்தது. அதன் அதிகாரபூர்வமான தலைமை மறைமுகமாக அதற்குச் சின்னத்தை வழங்கியிருந்த தழிழரசுக் கட்சியின் கைகளுக்கு வந்தது.

இதையடுத்து உடனடியாக, கூட்டமைப்புக்குள் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் ஓரங்கட்டப்பட்டு, தேர்தல் வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டனர். இதனால் விசனமடைந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி, சிவாஜிலிங்கம் போன்றோர் பிரிந்துபோய் இவர்களை எதிர்த்துத் தனித்து நின்று போட்டியிட்டு, படுதோல்வியடைந்தனர். அவர்களின் தோல்வியானது, வெளிநாட்டுத் தமிழரின் ஆதரவு சரிந்துவிடும் என்ற அச்சத்தையும் கூட்டமைப்பின் தலைமைக்கு இல்லாதாக்கி விட்டது.

இந்த அனுபவம் கூட்டமைப்பினுள் கையோங்கியிருந்த தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்திருந்த ஏனய அங்கத்துவக் கட்சிகளுக்கு ஓர் அச்சறுத்தலாக அமைந்திருந்தது. எனவே தற்போதைக்கு அங்கத்துவக் கட்சிகள் எதுவும் தம்மை எதிர்க்கத் துணிய மாட்டார்களென்பதைக் கண்டுகொண்ட தமிழரசுக்கட்சி, கூட்டமைப்புக்குள் தமது ஆதிக்கத்தை மென்மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியது.

அதற்கு இருந்த பிரதானமான சவால், மற்றைய அங்கத்துவக் கட்சிகள் யாவும் சேர்ந்தால் தான் சிறுபான்மையாகிவிடுவோம் என்பது. எனவே தன்னைப் பெரும்பான்மையாக்கிக் கொள்ள ஒரு காரியத்தில் இறங்கியது. தமிழரசுக் கட்சியில் பல புதிய முகங்களை இணைத்தது. அதனிடமிருந்த வேட்பாளர் நியமனங்களை வளங்கும் செயலாளர் பதவியைப் பயன்படுத்தி அவர்களை வேட்பாளர்களாய் நிறுத்தி, பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் தனது கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்டியது.


இவ்வாறு தாம் நினைத்த வகையில் வேட்பாளர்களை தெரிவு செய்யும் தமிழரசுக் கட்சியின் செயல் மற்றைய கட்சிகளுக்கு விசனத்தை ஏற்படுத்தியது. தமிழரசுக் கட்சி பெரும்பான்மையையும், அதுமட்டுமன்றி பிரதான பாத்திரங்களையும் கைப்பற்றிக்

5ம் பக்கம் பார்க்க...




BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# தவறுகளுக்குப் பொறுப்பேற்போம்!



## ஏடு இட்டோர் இயல்

பாய்க் கப்பலில் போய் சண்டை செய்த நெப்போலியன் காலத்து திருகோணமலையை வைத்துக் கொண்டு, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் உள்ள இந்தக் காலத்தில், திருகோணமலையின் 'கேந்திர முக்கியத்துவத்தை' பற்றி பீற்றிக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

எங்கள் முப்பதாண்டு காலப் போராட்டம் எதிர்பாராத விதமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்ட திலிருந்து, அதற்கான காரண, காரியங்களை கண்டறிந்து, புதிய பாதையில் செல்வதற்கான முயற்சிகள் எதுவுமே இதுவரைக்கும் முன்னெடுக்கப்படவில்லை. ஒரு புறத்தில், எல்லாக் குப்பைகளையும் கூட்டி, நிலவிரிப்புக்கு கீழ் மறைத்து விட்டு ஒன்றுமே நடவாதது போல பாவனை செய்து கொண்டு, 'நிலைமை வழமை போல' என்பது போல, பாசாங்கு செய்வது நடக்கிறது. விடுதலைப்புலிகள் முப்பதாண்டு காலம் போராடினார்கள் என்பதைப் பற்றிப் பேசுவதற்குக் கூட இன்றைய அரசியல்வாதிகள் தயாராக இல்லை. அந்தப் போராட்டம் பற்றியோ, அதில் தங்கள் உயிர்களை இழந்தவர்கள் செய்த தியாகம் பற்றியோ, கடைசியில் எஞ்சி எதிரியின் கருணைக்காக காத்திருக்கும் பழைய போராளிகள் பற்றியோ யாருக்கும் அக்கறை இல்லை.

மறுபுறத்தில், நடந்த எல்லா வற்றுக்குமே யாராவது ஒருவரைப் பிடித்து, குற்றத்தை அவரது தலையில் குற்றத்தைக் கட்டி விடும் முயற்சி நடைபெறுகிறது.

எங்களுடைய தோல்விக்கு நாங்கள் இதுவரைக்கும் நெல்சன் மண்டேலாவையும் டெஸ்மண்ட் ரூரூவையும் தவிர உலகத்தில் உள்ள சகலர் மீதும் பழியைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தியா, றோ, கருணாநிதி, ஐரோப்பிய சமூகம், சர்வதேச சமூகம், அமெரிக்கா, சிஐஏ, ஐ.நா, பான் கி மூன், நோர்வே, எரிக் சொல்கெய்ம் என்று ஒரு நீண்ட பட்டியலில் உள்ளவர்கள் எங்களுக்குத் துரோகம் இழைத்து விட்டதாகக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறோம். இதில் அகாசி மட்டுமல்ல, அசினைக் கூட விட்டு வைக்கவில்லை. இந்தக் கோபம் தான் இன்றைக்கும் இலங்கைத் தூ துவரகத்திற்கு முன்னால் கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் பண்ணியவர்களை இளையராஜாவுக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் பண்ண வைக்கிறது.

இதில் ஒரு ஈரானியப் படம் ஒன்றைத் தான் நினைவூட்டத் தோன்றுகிறது. அதில் ஒருவர் ஒரு கதை சொல்வார்.

ஒரு துருக்கியன் வைத்தியரிடம் போய் சொன்னானாம், 'வைத்தியரே! எனக்கு மூக்கில் தொட்டால் நோகிறது, முழங்காலில் தொட்டால் நோகிறது, முதுகில் தொட்டால் நோகிறது, உடலில் எங்கே தொட்டாலும் நோகிறது.'

தலைவர்களின் வேலையே, சாம, பேத, தான, தண்ட வழிமுறைகளைப் பாவித்து இலக்கை, வெற்றியை அடைவது தானே. நாங்கள் சொல்கிற 'சர்வதேச சதிவலைப் பின்னல்'களை முறியடித்து வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கையில் தானே தேசியத் தலைவரை ஆதரித்தோம்.

எதிரிகளின் சதித்திட்டத்தை அறிந்து கொள்ளாமல், அமெரிக்கா கப்பல் அனுப்பும் என்று நம்பினால், அது யாருடைய குற்றம்?

எங்களுக்கு எதிரிகளைப் பணிய வைக்கவும் முடியவில்லை. நண்பர்களைத் தக்க வைத்துக் கொள்ளவும் முடியவில்லை.

எங்களுக்கு எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதில் கூட தெளிவு இல்லை.

பரீட்சித்துப் பார்த்த வைத்தியர் சொன்னாராம், 'உனக்கு அங்கு இங்கெல்லாம் பிரச்சனை இல்லை. உனக்கு உன் நுனிவிரலில் தான் பிரச்சனை' என்று.

இதுதான் எங்கள் பிரச்சனை.

நாங்கள் இதுவரைக்கும் எங்கள் தோல்விக்கு மற்றவர்கள் மீது தான் குற்றம் சாட்டுகிறோம். இவர்கள் எல்லாம் துரோகம் இழைக்காவிட்டால், தேசியத் தலைவர் எங்களுக்கு ஈழத்தைப் பெற்றுத் தந்திருப்பார் என்று நம்புகிறோம்.

நாங்கள் தலைவர்களைத் தெரிவு செய்வதே, எதிரிகள், சதிகாரர்கள், துரோகிகள் எல்லாரையும் வெற்றி கொண்டு எங்களை வழி நடத்துவார்கள் என்று நம்பித் தானே. தட்டில் வைத்து தமிழீழம் கிடைக்கும் என்றால் அதற்கு எதற்கு இந்தப் போராட்டம் எல்லாம்? எதற்கு எங்களுக்கு ஒரு தேசியத் தலைவர்?

தலைவர்களின் வேலையே, சாம, பேத, தான, தண்ட வழிமுறைகளைப் பாவித்து இலக்கை, வெற்றியை அடைவது தானே. நாங்கள் சொல்கிற 'சர்வதேச சதிவலைப் பின்னல்'களை முறியடித்து வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கையில் தானே தேசியத் தலைவரை ஆதரித்தோம்.

எதிரிகளின் சதித்திட்டத்தை அறிந்து கொள்ளாமல், அமெரிக்கா கப்பல் அனுப்பும் என்று நம்பினால், அது யாருடைய குற்றம்?

முதலாவது, ஒரு விடயத்தை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். சர்வதேச அரசியல் யாழ்ப்பாணத்தைச் சுற்றி நடக்கும் விடயம் இல்லை. அவர்களுக்கு ஆங்காங்கே பல்வேறு பிரச்சனைகள் இருக்கும். அவர்கள் தங்கள் வேலைவெட்டியை எல்லாம் விட்டு விட்டு, எங்கள் ஊடகவியலாளர்கள் சொல்வது போல, எங்களை 'உன்னிப்பாக அவதானித்துக்' கொண்டிரு ப்பதில்லை. கருணாநிதி உட்பட!

இரண்டாவது, தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றோ, ஒரு தனிநாடு கிடைக்க வேண்டும் என்றோ அவர்களுக்கு எந்த நோக்கமும், கட்டாயமும் இல்லை. கட்டப்பொம்மன் பாஷையில் சொல்வதாயின் நாங்கள் 'என்ன மாமனா, மச்சானா?'.

மூன்றாவது, வெளியார் தலையீடு என்பது அவர்களின் லாபங்களுக்கானதே தவிர, எங்களுடைய நன்மைக்காக இல்லை.

இந்த உண்மையை நாங்கள் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை. நாங்கள் இன்னமும் ஏதோ இந்த சர்வதேச நாடுகளுக்கு நாங்கள் புண்ணியம் செய்ததாகவும், அந்தப் புண்ணியத்திற்கு பிராயச்சித்தமாக அவர்கள் எங்களுக்கு கடமைப்பட்டிருப்பதாகவும் தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

அந்நிய நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைக்கும் எந்த நாடும் தன்னுடைய நோக்கங்களையும் நலன்களையும் மட்டுமே கருத்தில் கொள்ளும். அதற்காக யாரையும் பயன்படுத்துவதற்காக அவர்கள் உதவியைச் செய்யக் கூடும். அதற்காக, அந்த உதவிகளை எங்கள் நலன்களுக்காக செய்யப்படுகின்ற உதவி என்று நாங்கள் நினைப்பது எங்களுடைய முட்டாள்தனம்.

சர்வதே மட்டத்தில் மாறுகின்ற நிலைமைகள் இந்த வெளி விளையாட்டுக்காரர்களின் நிலைப் பாட்டையும் மாற்றும் என்பதையும் நாங்கள் உணர வேண்டும். மேற்குலகைப் பொறுத்தவரைக்கும், சோவியத்தோடு அன்று நின்ற இந்தியா வேறு, பெரும் சந்தையாக வளர்ந்திருக்கும் இன்றைய இந்தியா வேறு. இந்தியாவை வலுவிழக்கச் செய்ய எங்களுக்கு உதவி செய்ய அன்றைக்கு இருந்த தேவை இன்றைக்கு மேற்குலகுக்கு இல்லை. இதைப் போல, அன்றைக்கு அமெரிக்க சார்பான ஜே. ஆருக்கு எதிராக எங்களுக்கு உதவ வேண்டிய தேவை, இன்றைக்கு மகிந்தவோடு சல்லாபம் செய்கின்ற இந்தியாவுக்கு இல்லை.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர எதிரிகளும் இல்லை, நிரந்தர நலன்கள் தான் உள்ளன.

பாய்க் கப்பலில் போய் சண்டை செய்த நெப்போலியன் காலத்து திருகோணமலையை வைத்துக் கொண்டு, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் உள்ள இந்தக் காலத்தில், திருகோணமலையின் 'கேந்திர முக்கியத்துவத்தை' பற்றி பீற்றிக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

எங்களுடைய இந்த நினைப்புத் தான் பிழைப்பைக் கெடுக்கிறது.

இந்த உண்மைகளை விளங்கிக் கொள்ளாமல், எங்களுக்கு கட்டாயம் இவர்கள் உதவி செய்ய வேண்டும், இல்லாவிட்டால் நடக்கிறதே வேற என்பது போல வரிந்து கட்டுவதில் எந்த நியாயமும் இல்லை.

நான்காவது, அரசியலில் அனுதாபமும் ஆதரவும் தேட வேண்டுமாயின், அதற்கான ராஜதந்திர வழிகள் உள்ளன. கணம் வாதம், கணம் பித்தம் என்பது போல, எங்களுக்கு ஒரு எண்ணம் வந்தால் சவால் விடுவதும், இன்னொரு எண்ணம் வந்தால், ஐயோ, காப்பாற்று என்று ஓலமிடுவதும் அனுதாபத்தையும் ஆதரவையும் தேட உதவாது. இது அமெரிக்காவுக்கும் பொருந்தும். இந்தியாவுக்கும் பொருந்தும்.

எங்களுக்கு எதிரிகளைப் பணிய வைக்கவும் முடியவில்லை. நண்பர்களைத் தக்க வைத்துக் கொள்ளவும் முடியவில்லை.

எங்களுக்கு எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதில் கூட தெளிவு இல்லை. எங்களுடைய வழமையான யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் எங்களைப் புத்திசாலிகளாகவும் மற்றவர்கள் எல்லோரையும் முட்டாள்கள் என்ற நினைப்பில், எவரையும் எங்களால் பயன்படுத்த முடியும் என்ற மிதப்பில் திரிகிறோம். இந்தத் திமிருக்கு எவர் அனுதாபம் காட்டுவார்?

எங்கள் நன்மைக்காகச் சொல்லும் புத்திமதிகளைக் கூட கேட்க முடியவில்லை. எனக்குப் புத்தி சொல்ல நீ யார் என்று நாங்கள் தூக்கணாங்குருவிக் கூட்டைப் பிய்த்த கதையாக, எங்களுடைய வாழ்விடத்தையே சிதைத்து விட்டோம்.

சமாதானத்தை முன்னெடுங்கள் என்று சொன்னவுடன் கோபம் வந்தது. எங்கள் தேசியத் தலைவர் திட்டம் வைத்திருக்கிறார், எங்களுக்கு யாரும் புத்திமதி சொல்லத் தேவையில்லை, எங்களுடைய விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று மிரட்டலும் சவாலும் விடுத்தது நாங்கள்.

வாங்கக் கூடாத இடத்தில் அடி வாங்கிய பின்னால், ஐயோ, இந்த அநியாயத்தைக் கேட்பார் யாருமே இல்லையா என்று ஒப்பாரி வைத்து என்ன பயன்?

இவ்வாறாக, இன்றைக்கு நாங்கள் குற்றம் சாட்டுகின்ற ஒவ்வொருவரும் ஏதோ ஒரு கணங்களில், தங்கள்

பூபாளம் வார இதழ் Palm Springs Newspapers Ltd நிறுவனத்தினரால் ரொறன்ரோ, கனடாவில் வெளியிடப்படுகிறது.
இந்த இதழில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.
வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.
Boobalam is published by Palm Springs Newspapers Ltd.
1345, Morningside Ave #8, Scarborough, On, M1B 2T3 Tel: 416 284 4004 e-mail: boobalam@ymail.com Web:www.boobalam.com
Palm Springs Newspapers Ltd is a division of Palmgrove Media Group Inc.

நலன்களுக்காகவோ, எங்கள் நன்மைக்காகவோ சமாதானத்தை முன்னெடுங்கள் என்றபோது நாங்கள் யுத்தவிரும்பிகளாக இருந்தோம். திடீரென்று நாங்கள் சமாதான விரும்பிகளாக மாறினால், எங்கள் செயலை வெறும் நடிப்பு என்று நினைக்க மாட்டார்களா?

சர்வதேச அங்கீகாரம் என்பது லட்சம் பேர் கொடி பிடிப்பதால் வருவதில்லை. அது ராஜதந்திர வழிகளில் புத்திசாதுரியமான செயற்பாடுகளால் கிடைப்பது.

நாங்கள் எங்களுடைய தவறுகளைப் புரிந்து கொள்ளாமல் மற்றவர்கள் மேல் பழியைப் போடுவதால், எங்கள் தவறுகளைப் பற்றி புரிந்து கொள்ள மறுக்கிறோம்.

முழு இனமும் தனி ஒரு மனிதன் மேல் நம்பிக்கை வைத்து தன் எதிர்காலத்தை ஒப்படைத்தது தவறில்லையா?

இந்தியாவுடனான உறவைச் சிதைக்கும் நடவடிக்கைகள் நடை பெற்ற போது, அதைக் கொண்டாடியது எங்கள் தவறில்லையா?

வடக்கு கிழக்கு இணைப்போடு மாகாணசபை கிடைக்கும் சந்தர்ப்பத்தை உதறி எறிந்தது எங்கள் தவறில்லையா?

நோர்வே மத்தியஸ்தத்தில் பேச்சு வார்த்தை நடந்த போது, எங்கள் தரப்பில் நடந்த மீறல்களை கண்டிக்காதது எங்கள் தவறில்லையா?

கண்காணிப்புக் குழுவினரை வெளியேறச் சொன்னது எங்கள் தவறில்லையா?

மகிந்தவை யதார்த்தவாதி என்ற போது, தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனத்தைப் புகழ்ந்தது எங்கள் தவறில்லையா?

எழுபது கோடியை மகிந்தவிடம் வாங்கிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பைத் தடுத்தது எங்கள் தவறில்லையா?

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். எங்கள் தவறுகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளாமல், அதற்கான காரணங்களை ஆராய்ந்து திருந்திக் கொள்ளாமல், நாங்கள் 'சுத்தமான சூசைப்பிள்ளைகள்' மாதிரியும், மற்றவர்கள் தான் துரோகம் இழைத்து விட்டார்கள் என்றும் சொல்வது எங்களைச் சரியான பாதையில் கொண்டு செல்லாது. இது வெறுமனே எங்களை நிழலோடு சண்டையிட வைக்குமே தவிர, உண்மையான பிரச்சனைகளை நாங்கள் அறிந்து, தவறுகளைத் திருத்திக் கொள்ள வழிவகுக்காது.

துருக்கியனுக்கு வைத்தியர் சொன்னது போல, தவறு மற்றவர்களுடையது மட்டும் அல்ல. எங்களுடையது!

இன்றைய எங்கள் நிலைக்கு காரணம், நாங்களும் தான். இல்லை, மற்றவர்கள் மட்டும் தான் அதற்கு காரணம் என்று முரண்டு பிடிப்போம் என்றால், நாங்கள் பலம் இல்லாதவர்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்கிறோம். மற்றவர்களால் மட்டுமே எங்கள் தலைவிதியைத் தீர்மானிக்க முடியும் என்ற அளவுக்கு கையாலாகாதவர்கள் நாங்கள் என்று நம்புகிறவர்கள் ஆகிறோம்.

எங்களுடைய தவறுகளுக்கு நாங்கள் எப்போது பொறுப்பேற்கிறோமோ, அது தான் எங்கள் சரியான பாதைக்கான முதல் அடியாக இருக்கும்.

அரசியல் சுவடிகளிலிருந்து...

# அடைந்தால் திராவிட நாடு! இல்லையேல் சுடுகாடு!

கவிஞர் கண்ணதாசன் திராவிட இயக்கத்தின் பிரச்சாரப்பீரங்கியாக ஒருகாலத்தில் இருந்தவர். பின்னர் திராவிட இயக்கத்தின் போக்கில் வெறுப்படைந்து அதிலிருந்து வெளியேறினார். அவர் தனது தவறுகளையும் அனுபவங்களையும் வனவாசம் என்ற நூலில் மனந்திறந்து எழுதியுள்ளார். திராவிட இயக்கத் தலைவர்களின் பொய்த்தனங்களை இன்று விளங்கிக் கொள்வது கஷ்டமில்லை. ஆனால் கண்ணதாசன் பலவருடங்களுக்கு முன்பே இவற்றையெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார். அவர் கூறியுள்ள ஒரு சம்பவம் திராவிடத் தலைவர்கள் எவ்வளவு தூரம் திராவிடநாடு கோரிக்கையில் விசுவாசமாக இருந்தார்கள் என்பதனைக் காட்டுகிறது.

திராவிட நாட்டை உண்மை யென நம்பிய கண்ணதாசன் "திராவிட நாட்டை அடைந்தே தீருவோம்" என்று ஒருநாள் உணர்ச்சிகரமாகப் பேசிக்கொண்டிருந்தார். மேடையின் பின்னுக்கிருந்த "சிந்தனைச்சிற்பி" சிற்றரசு "இவனுக்கு ஒரு கடப்பாறையும் மண்வெட்டியும் கொண்டுவந்து கொடுங்கோடா. திராவிடநாட்டுக்கு வேலி போடட்டும். இறங்கிடா மேடையாலை." என்று கூறினார்.

"திராவிடநாடு எங்கேயிருக்கிறது? என்ற கேள்விக்கு திராவிடத் தலைவர்கள் கூறிய பதிலை எழுதவே கூச்சமாயிருக்கிறது. மொத்தத்தில் திராவிடத் தலைவர்களுக்கு திராவிடநாடு கோரிக்கை ஒரு முசுப்பாத்தி.

திராவிட இயக்கத் தொடக்ககாலத்தில் பல தெலுங்கர்கள் இயக்கத்தில் இருந்தார்கள். வைகோ பிற்பட்ட காலத்தில் வந்து சேர்ந்தார். தமிழ்நாடு மேல்சபைத் தலைவராகவிருந்த ˙றரசு ஒரு தெலுங்கர். 1944ஆம் ஆண்டு நடந்த மாநாட்டில் நீதிக்கட்சி திராவிடர் கழகமாக மாறியது. மாநாட்டில் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற கோரிக்கை முன் வைக்கப்படவிருந்தது. "அப்படியென்றால் நாங்கள் எங்கே போவது?" என்று ˙றரசு போன்றவர்கள் கேட்டபடியாற்றான் அந்தக் கோரிக்கை "திராவிடநாடு திராவிடருக்கே" என மாற்றப்பட்டது. திராவிடநாடு ˙கை தமிழர், மலையாளிகள், கன்னடர், தெலுங்கர் என்போரை உள்ளடக்கினாலும் அக் கோரிக்கை தற்போதைய கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் துப்பரவாக எடுபடவில்லை. திராவிடம் என்ற கருத்து இன்று மீள்பரிசீலனைக்கு உட்பட்டு வருகிறது. "திராவிடம் பேசி அழிந்தோம்" என்று தமிழ்த்தேசியம் பேசுவோர் பலர் இன்று கூறுகின்றனர். கர்நாடகம், ஆந்திர மாநிலங்கள் தமிழகத்தை நதிநீர் போன்ற விடயங்களில் வஞ்சிக்கின்றன என்பது அவர்களின் நிலைப்பாடு. சீமான் இப்போது பெரியார் பற்றிய சர்ச்சை ஒன்றில் ஈடுபட்டிருக்கிறார்.

சிந்தனைச்சிற்பிஎன்பது சிற்றரசின் பட்டப்பெயர். திராவிட இயக்கத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பட்டப்பெயரை வைத்திருந்தார்கள். தலைவர்களை பெயர் சொல்லிக் கூப்பிடுவது தலைவர்களுக்கு மரியாதைக் குறைவாகக் கருதப்பட்டது. கருணாநிதியை "தலைவர்" அல்லது "கலைஞர்" என்றுதான் குறிப்பிடவேண்டும்.

கருணாநிதியை கருணாநிதி என்று பெயர் சொல்லிய இலங்கைத்தமிழர் ஒருவர் வாங்கிக்கட்டிக்கொண்ட சம்பவம் சுவையானது. 1983ஆம் ஆண்டு தமிழ்ப்படம் ஒன்றிற்கு "விடுதலைப்புலிகள்" என்று பெயர் சூட்டப்பட்டது. படத்தின் பெயரை மாற்றுவதற்காக பிரான்சில் இருந்துவந்த ஒரு இலங்கைத்தமிழர் இன்னொரு தி.மு.க பிரமுகருடன் தி.மு.க.வின் ஒரு குட்டித்தலைவரைப் பார்க்கச் சென்றார். குட்டித்தலைவர் வந்தவர்களை என்ன விடயம் என்று கேட்டார். பிரான்சிலிருந்து வந்தவருக்கு தமிழ்நாடு "தா" அரசியல் பற்றி ஒன்றும் தெரியாது. "புலிகள் என்ற பெயரில் படம் எடுக்கினம். படம் எடுக்கிறவர் கருணாநிதிக்கு வேண்டியவர். கருணாநிதி சொன்னால் அவர் பெயரை மாற்றுவார்." என்று இலங்கைத்தமிழர் கூறினார். "என்ன சொன்னாய்? கருணாநிதியோ! எழும்பு" என்று சொல்லி குட்டித்தலைவர் வந்தவர்களை விரட்டியடித்தார்.

திராவிட இயக்கப் பாணியைப் பின்பற்றி இலங்கையிலும் தமிழரசுக் கட்சி கூட்டணித் தலைவர்கள் பட்டப்பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். பெரும்பாலான ஆயுதப்போராட்ட இயக்க தலைவர்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தனர். "கொலையிலிருந்து தப்பிறதே பெரும்பாடு. இதற்குள் பட்டப்பெயர் ஒரு கேடா?" என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும்! இன்றைய தலைவர்கள் இன்னமும் ஏன் பட்டப்பெயர்களை வைக்கவில்லை? என்று விளங்கவில்லை. "புயல்" வரிசையில் "அறிக்கைப்புயல்" என்று ஏதாவது பெயர்கள் வைப்பது மிகவும் பொருத்தமாயிருக்கக்கூடும்!

ரூத்ரதாண்டவன்

# வெள்ளையினக் குடியேற்றத்தை ஊக்குவிக்கிறது கனடிய அரசு

கனடாவின் கன்சர்வேட்டிவ் அரசு குடிவரவு விதிகளை இறுக்க மாக்குவதன் மூலம் கனடாவிற்கு குடியேறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்க முயன்று வருவது தெரிந்ததே. ஆயினும் அரசு குறைக்க முயன்று வருவது மூன்றாவது உலக நாடுகளில் இருந்து வர முயற்சிப்போரையே என்று தெரிய வருகிறது. கடுமையான குடிவரவு விதிகளை அமுல்படுத்துவதாக பல்வேறு சமூக அமைப்புகளினதும் சிறுபான்மை இனங்களினதும் கண்டனத்திற்கு உள்ளான கனடிய குடிவரவு அமைச்சரான ஜேசன் கெனி தற்போது அயர்லாந்தில் இருந்து இளம் திறமை வாய்ந்த வேலையாட்களை கனடாவிற்கு வருமாறு ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

கனடிய சர்வசே அனுபவம் என்ற திட்டத்தின் கீழ் வருடாந்தம் கனடாவிற்கு வரும் ஐரிஷ் இளைஞர்களின் தொகையை இரண்டு மடங்காங்கும் முயற்சியில் ஜேசன் கெனி ஈடுபட்டுள்ளார். தற்போதைய எண்ணிக்கையில் இருந்து இந்த தொகை அடுத்த வருடம் 6350 ஆக அதிகரிக்கும் எனவும் 2014ல் பத்தாயிரமாகும் என்று குடிவரவு அமைச்சின் செய்தி கூறுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தற்காலிகமாக சில வருடங்களுக்கு வந்து வேலை செய்த பின் திரும்பிச் செல்ல முடியும் எனினும் இங்கே நிரந்தரமாகத் தங்க விரும்புபவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் என்றே கூறப்படுகிறது.

அமைச்சர் ஜேசன் கெனி தன்னுடைய நோக்கம் அயர்லாந்தில் இருந்து திறமையான வேலையாட்களைக் கொண்டு கனடாவிற்கு குடியேற்று வதல்ல என்றும் அவர்கள் இங்கு பெறும் அனுபவத்தைக் கொண்டு மீண்டும் சென்று தங்கள் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்பலாம் என்றும் கூறிய போதிலும், இதன் உள் நோக்கம் வெள்ளையினக் குடியேற்றக் காரர்களின் எண் ணிக்கையை அதிகரிப்பதே என்று நம்பப்படுகிறது.

## கூட்டமைப்புக்குள்...

கொள்ளும் திட்டத்தில் செயற்படுகிறதென்பது அவர்களுக்குத் தெளிவாய்த் தெரிந்தது.

முன்னர் அரசியலில் இல்லாத பிரமுகர்கள் புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்படுவது, குறிப்பாக அப்படிப் புதிய அறிமுகமாக வந்த சுமந்திரன் எந்தக் கேள்வியுமின்றி, கூட்டமைப்பின் அடுத்த தலைமைக்கு உயர்த்தப்படுவது போன்ற விடயங்கள் தம்மைச் சமமான தலைமைகளென நினைத்திருந்த மற்றைய கட்சிகளின் தலைமைக்குச் சவாலாக அமைந்தன. இதனால் சுரேஷ் பிரேமச்சந்திரன் வகித்த பேச்சாளர் பதவி கேள்விக் கிடமானது. ஏனைய கட்சித் தலைவர்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போனது. பல அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கும் சந்திப்புக் களுக்கும் சம்பந்தர் சுமத்திரன் போன்றோர்தான் சென்று வருகின்ற நிலைமையும், இவைகுறித்து ஏனய அங்கத்துவக் கட்சிகளுடன் கலந்தாலோசனை நடத்துவதுகூட இல்லை என்ற நிலைமையும் தலைதூக்கியது.அடுத்த முக்கியமான பிரச்சினை நிதிசேகரிப்பும் வெளிநாட்டுத் தமிழரின் ஆதரவும். கூட்டமைப்பு என்ற பெயரிலேயே வெளிநாட்டில் ஆதரவை ஈட்டிக்கொண்டிருந்த போதிலும், அவ் வெளிநாட்டில் கூட்டமைப்பைப் பிரதிநிதப்படுத்தும் பிரதிநிதிகளாக தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களே முன்னிறுத்தப் பட்டனர். அத்தோடு கூட்டமைப்புக்கு எனச் சேகரிக்கும் நிதி முழுவதும் தமிழரசுக் கட்சியின் கணக்கிற்கே திருப்பப்பட்டு, அதைத் தமிழரசுக் கட்சியே கையாளுவதாக ஆக்கப்பட்டது. அக்கணக்கு வழக்குகள் அங்கத்துவக் கட்சிகளுக்குத் தெரிவிக்கப்படுவதுமில்லை.

இந் நிலையில்தான் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அப்படிச் செய்வதொன்றின் மூலம்தான் ஒரு கூட்டுத் தலைமையை நிறுவவும், தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி பொது வேலைத்திட்டத்தில் செயற்பட வைக்கவும் முடியும் என்று அங்கத்துவக் கட்சிகள் வலியுறுத்தின.

ஆனால் அதை தமிழரசுக் கட்சி விரும்பவில்லை. எனினும் கூட்டமைப்பைப் பதிவதற்கு தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பம் செய்திருந்தனர். ஆனால் அதற்கு

> அன்ரன் பாலசிங்கம் ஒரு பேட்டியின்போது கூட்டமைப்பு என்பது தாம் கூறுவதைச் செயற்படுத்தும் பொம்மைகள் என்று கூறியிருந்தார். (அதனால் விசனமடைந்தே ஆனந்தசங்கரி அதைவிட்டு விலகினார்.) அதாவது புலிகள் கூட்டமைப்பு தனி அரசியல் சக்தியாகப் பரிணமிப்பதை விரும்பவில்லை.



சம்மதம் தெரிவிக்கும் கடிதத்தை தமிழரசுக் கட்சி கையளிக்கவில்லை. கையெழுத்துப் போட வேண்டிய மாவை சேனாதிராஜா கை விரித்துவிட்டார். அதனால் அவ் விண்ணப்பம் காலாவதியாகி நிராகரிக்கப் பட்டது.

இது அங்கத்துவக் கட்சிகளிடையே விரக்தியை ஏற்படுத்தியது. அத்துடன் கூட்டமைப்பைப் பதிவு செய்யத் தேவையில்லை என்ற கருத்துக்களை தமிழரசுக் கட்சியினர் தெரிவிக்கலாயினர். புலிகளே அப்போது கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிய விரும்பியிருக்கவில்லை என்று காரணம் கூறினர்.

புலிகள் காலத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியைப் பதிவு செய்வதற்கு புலிகள் விரும்பியிருக்கவில்லை. அதற்குக் காரணங்கள் இருந்தன. அன்ரன் பாலசிங்கம் ஒரு பேட்டியின்போது கூட்டமைப்பு என்பது தாம் கூறுவதைச் செயற்படுத்தும் பொம்மைகள் என்று கூறியிருந்தார். (அதனால் விசனமடைந்தே ஆனந்தசங்கரி அதைவிட்டு விலகினார்.) அதாவது புலிகள் கூட்டமைப்பு தனி அரசியல் சக்தியாகப் பரிணமிப்பதை விரும்பவில்லை. அது தம்மை விடுத்து விடயங்களைக் கையாளக்கூடிய வாய்ப்பாக ஆகிவிடும் என்று கருதிய அவர்கள் ஏற்கெனவே இருக்கும் சின்னமொன்றில் அது செயல்படட்டுமென எண்ணினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தையே கூட்டமைப்புக்கு தொடர்ந்து பாவிக்க எண்ணியிருந்தனர். ஆனால் ஆனந்த சங்கரி கூட்டமைப்பிலிருந்து விலகி, தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அதன் சின்னத்தையும் தனதாக்கிக் கொண்டதால் மாற்று வழியாக தமிழரசுக் கட்சியின் சின்னத்தைப் பாவிக்கும்படி ஆனது. தமிழரசுக் கட்சியின் செயலாளராக மாவை சேனாதிராஜா இருந்துவந்ததால் கூட்டமைப்பின் செயலாளராகவும் அவரே செயற்படலானார். இதைத்தான் புலிகள் அன்று கூட்டமைப்பைப் பதிவதற்கு விரும்பி யிருக்கவில்லை என்று இன்று கூறி, இன்றும் பதியாதிருக்க அதைக் காரணமாகக் காட்டுகின்றனர்.

ஆனால் அண்மைய மாகாணசபை தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதும் நிலைமை சூடுபிடிக்கத் தொடங்கியது. வேட்பாளர் தெரிவில் அங்கத்துவக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை மிகக் குறைவு என்றும், தமிழரசுக் கட்சிக்கு ஒரு பங்கு எனில் ஏனைய அனைத்துக் கட்சிகளுக்கும்

11ம் பக்கம்...

> கூட்டமைப்புக்கு எனச் சேகரிக்கும் நிதி முழுவதும் தமிழரசுக் கட்சியின் கணக்கிற்கே திருப்பப்பட்டு, அதைத் தமிழரசுக் கட்சியே கையாளுவதாக ஆக்கப்பட்டது. அக் கணக்கு வழக்குகள் அங்கத்துவக் கட்சிகளுக்குத் தெரிவிக்கப்படுவதுமில்லை.

## வருந்துகிறோம்

சென்ற வாரம் ஏடு இட்டோர் இயல் பகுதியில் இடம் பெற்றிருந்த இரு விடயங்கள் பற்றி எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

சோழ சாம்ராஜ்யத்தை மாலிக் கபூர் வெற்றி கொண்டதாக அதில் குறிப்பிட்டிருந்த தகவல் தவறானது. மாலிக் கபூர் சோழ சாம்ராஜ்யத்தின் பின்னான, பாண்டியர்களையே வெற்றி கொண்டிருந்தான். வரலாற்றுத் தகவல் சம்பந்தமான இந்தத் தவறுக்கு வருந்துகிறோம்.

அடுத்து அந்தப் பகுதியில் மாலிக் கபூரின் பால் நிர்ணயம் பற்றி பாவிக்கப்பட்டிருந்த வார்த்தைப் பிரயோகமும் தவறானது என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பிறப்பிலே ஆணாக அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் தம்மைப் பெண்ணாக உணர்ந்து பெண்ணாக வாழ முயற்சிப்பவர்கள் திருநங்கைகள் (transwomen) என்று அழைக்கப் படுகிறார்கள். பிறப்பிலே பெண்ணாக அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் தம்மை ஆணாக உணர்ந்து ஆணாக வாழ முயற்சிப்பவர்கள் திருநம்பிகள் (transmen) என்று அழைக்கப்படுகிறார்கள். திருநங்கைகளையும், திருநம்பிகளையும் இழிவுபடுத்தும் இரண்டு பதங்கள் கடந்த வார ஏடு இட்டோர் இயல் பகுதியில் பயன்படுத்தப்பட்டிருகின்றன.

அலாவுதீனின் படைத் தளபதியாக இருந்த மாலிக் கபூர் ஆணாகப் பிறந்து, அந்தப்புரத்தில் பணி புரிவதற்காக ஆண்களின் பால் உறுப்புகளைச் சிதைக்கும் கொடூரமான நடைமுறையினால் சிறுவயதிலேயே பாதிக்கப்பட்ட ஒருவர். அவரை வர்ணிப்பதற்கு பைபிள் மொழிபெயர்ப்பில் வருகின்ற அண்ணகன் போன்ற சொல்லைப் பயன்படுத்தாமல், பேச்சுவழக்கில் பயன்படுத்தும் வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருந்தன. பாவிக்கப் பட்ட சொற்பதங்களும், பாவனையும் திருநங்கைகளை, திருநம்பிகளை, அண்ணகன்களை இழிவுபடுத்துவதாக அமைந்ததை சுட்டிக்காட்டலின்பின் புரிந்து கொள்கின்றோம்.

தங்களால் கேவலமாக இழிவு படுத்தப்படும் ஒரு வகையினராலேயே தமிழர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே அந்தப் பதப் பிரயோகம் செய்யப்பட்டிருந்தது. இந்தப் பதங்கள் பயன்படுத்தப்பட்டதில், அவர்களை இழிவுபடுத்தும் எந்த நோக்கமும் இருக்கவில்லை.

உரிமைகள், அதிகாரங்கள் மறுக்கப்பட்டு, களங்கப்படுத்தப்பட்டு சமூகத்தின் விளிம்புகளுக்குத் தள்ளப்பட்டவர்களின் நலன் சார்ந்து செயற்படுவதே பூபாளம் தொடங்கியதற்கான முக்கிய குறிக்கோள்களில் ஒன்று. சமூகத்தால் அடக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள் பற்றி அக்கறை மட்டுமன்றி, அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும், செயற்பட வேண்டும் என்று முனையும் ஒரு வெளியீட்டில் இவ்வாறான பதப் பிரயோகம் தவறானது என்பதை உளப்பூர்வமாக உணர்ந்து கொள்கிறோம்.

இது குறித்து உங்கள் மன்னிப்பைக் கோரி நிற்கிறோம்.

உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள...

## பூபாளத்தின் முற்றவெளி

முகப்புத்தகத்தின் உள்நுழை அடையாளத்துடன் boobalam.com இல் நீங்கள் நுழைந்து உங்கள் கருத்துக்களை சுதந்திரமாய் தெரிவிக்கலாம். முகப்புத்தக அடையாளம் இல்லாதோர் உங்கள் விபரங்களை boobalam@ymail.com என்ற மின்னோலை விலாசத்திற்கு ஓலை அனுப்புங்கள்.

## உங்கள் சமூக நிகழ்வுகளை பூபாளம் இணையத் தளத்தில் இலவசமாய் விளம்பரப்படுத்துங்கள்!

பழைய மாணவர்களின் ஒன்று கூடல்களா? ஊர்ச் சங்கங்களின் ஆண்டு விழாவா?சமூக அமைப்புகளின் கலந்துரையாடலா?

அந்த நிகழ்வுகள் பற்றிய விபரங்களை boobalam@ymail.com என்ற விலாசத்தில் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அவற்றை நாங்கள் பூபாளம் இணையத் தளத்தில் இலவசமாகப் பிரசுரிப்போம்.


SUPER SAVINGS
Throughout The Store
Memory Foam Mattress
UP TO 40% OFF
4 Pc Sofa Set W/Coffee Table
Bonded Leather
$899
$399
Memory Foam Mattress
From
$999
Lowest Price Guaranteed
Colour Choices Available
Bonded Leather
Sectional Sofa
$949
Bonded Leather
$999
Double Bed
From
$349
Bonded Leather
$1199
3 Pc Sofa Set W/5/Recliners
Top Grain 100% Genuine Italian
Leather Sectional Sofa W/ 4 RECLINERS
$2399
Complete Bedroom Set
$899
Complete Bedroom Set
$1199
Bonded Leather
$999
3 Pc Sofa Set
$299
$949
Complete Bedroom Set
$999
Italian Wardrobe
$599
7pc Dinette
$599
$139
Single
Folding Bed
$149
Futon Bed
$499
Bench
$299
$99
$109
$199
$299
Sunflowers
furniture
3024
KENNEDY RD.
416.609.8556

# இது களப்பிரர் காலம்

**சிவதாசன்**

*கார்ல் மார்க்ஸ் காலத்தில் அதிகார வர்க்கம் சமூகக் கட்டுப்பாட்டுக்காய் மதத்தைப் பாவித்தது, இப்போது ஒரு தனிமனிதன் கூட தன் சுயதேவைகளுக்கு மதத்தைக் கருவியாகப் பாவிக்கலாமே என்னுமளவிற்கு மதம் மக்கள் மயமாக்கப்பட்டிருக்கிறது,*

"மதம் அபின் போன்றது. அதிகார வர்க்கத்தினால் ஒரு சமூக கூட்டியக்கத்திற்கான (tool for social control) மூலக் கருவியாக அது பயன்படுத்தப்பட்டது. சமூகப் புரட்சி ஒன்றே உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர வல்லது" என்று கார்ல் மாரக்ஸ் கருதினார்.

மார்க்ஸின் கருதுகோள்கள் பல இன்றய சமூக இயக்கத்திற்கான சமன்பாடுகளில் எந்தளவுக்குப் பிரயோகிக்கப்பட முடியும் என்பது விவாதத்துக்குரியது. தென்னமெரிக்காவில் நடைபெற்ற அரசியல் மாற்றங்களுக்கு மதமும் மதவாதிகளும் இறையியலை வெற்றிகரமாகப் பிரயோகித்த வரலாற்றுக்கு அதிக வயது இல்லை. பல அரசியல் நிகழ்வுகளின் பின்னால் மதங்கள் இருந்திருக்கின்றன என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

மத்திய கிழக்கில் பல அதிகார வர்க்கங்கள் தூக்கியெறியப் பட்டிருக்கின்றன. பல ஈடாட்டம் கண்டு வருகின்றன. பல அதிகார வர்க்கங்கள் தமது ஆட்சிகளைத் தக்க வைத்தக் கொள்வதற்கு மதத்தைக் கருவியாகப் பாவிக்கின்றன. ஒட்டு மொத்தமாக மதம் மக்களை ஒட்டுவதற்கு ஏற்ற கருவிதான். அந்த வகையில் கார்ல் மார்க்ஸ் சொன்னது சரியாகவேதான் இருக்கிறது. ஆனால் அவரால் முன் வைக்கப்பட்ட சமூகப் பொதுவுடைமைச் சித்தாந்தமும் ஒரு போதை வஸ்துவேதான். சமூக (அரசியல்) மாற்றத்திற்கென புரட்சியை நோக்கி மக்களை ஓட்டிச் சென்ற இன்னுமொரு மதமே அவரது சித்தாந்தம்.

ஈழ விடுதலை இயக்கங்கள் பலவும் தமது "புரட்சிகர" மக்கள் விடுதலைக்கு இப்படியான சித்தாந்த மதங்களையே பாவித்தன. அவை உள்ளூர் அல்லது வெளியூர்த் தயாரிப்பாக இருந்திருக்கலாமே தவிர கருவி ஒன்றுதான்.

தமிழ் நாட்டில் இருண்ட காலமெனக் கருதப்பட்ட களப்பிரர் காலத்தில் பௌத்த, ஜைன மதங்களின் எழுச்சி அதிகார வர்க்கங்களின் ஆதரவோடு வேகமாகப் பரம்பலாகும்போது அவற்றை எதிர்கொள்வதில் பக்தி இயக்கம் மிகப் பாரிய பங்கை ஆற்றியது. தமது மதமே சிறந்தது என்பதை நிரூபிப்பதற்காக எல்லா மதக் காரரும் வாதப் பிரதி வாதங்களில் ஈடுபட்டுக் கழுவேறிய கதைகள் பொய்யானவை அல்ல. சைவம் பௌத்தத்தை இலங்கைக்குத் துரத்தியது வரலாறு. மதம் பரப்ப வந்த மகத நாட்டுக்காரர் தமிழ் மொழியை வளர்த்துச் சென்றதே மிச்சம்.

ஈழத்திலும் கிறிஸ்தவ மதப் பரம்பலை எதிர்த்து ஆறுமுகநாவலர் போன்றோர் மதப் போர்களை மேற்கொண்டு ஓரளவு வெற்றியும் பெற்றனர்.

மத்திய கிழக்கில் ஐரோப்பிய ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கு சிலுவைப் போர்களை நடத்தின அப்போதய அதிகாரங்கள். ஒட்டோமான் சாம்ராஜ்யத்தின் பரவலுக்கும் மதமே காரணமாக அமைந்தது.

மதத்திற்காக உயிர் துறப்பது இன்றுவரை நடந்து வருவதுதான். மக்களை உசுப்பேற்றி எதையாவது சாதிக்கவேண்டுமென்றால் தற்போதுள்ள இலகுவானதும், இலவசமாக் கிடைக்கக்கூடியதுமான கருவி மதமே தான். துர்ப்பாக்கியமான விடயம் என்னவென்றால் கார்ல் மார்க்ஸ் காலத்தில் அதிகார வர்க்கம் சமூகக் கட்டுப்பாட்டுக்காய் மதத்தைப் பாவித்தது. இப்போது ஒரு தனிமனிதன்கூட தன் சுயதேவைகளுக்கு மதத்தைக் கருவியாகப் பாவிக்கலாமென்னுமளவிற்கு மதம் மக்கள் மயமாக்கப்பட்டிருக்கிறது.

இன்றய இலங்கையில் தமது சுய லாபங்களுக்காக பௌத்தப் பரம்பலை மேற்கொள்கிறார்கள் மஹிந்த சகோதரர்கள். சித்தாந்த மதத்தை ஒரு காலத்தில் வெற்றிகரமாகக் கையாண்ட ஜே.வி.பி யினரையே பெட்டிக்குள் முடக்கி விட்டிருக்கிறது பௌத்தம். மக்கள் பசி தீர்க்கப் போராடாது பௌத்த காவலர்களுக்காகப் போராட லட்சக்கணக்கில் திரளுகிறார்கள்.

விடுதலைப் புலிகளும் "இந்து" மதத்தைக் கருவியாகப் பாவித்திருந்தால் தமிழருக்கு எப்போவோ விடுதலை கிடைத்திருக்கும் என நம்புவர்களும் உண்டு.

மாற்றங்கள் எதுவாயினும் அதை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளவல்ல ஏதுவான ஒரே கருவி அன்று தொட்டு இன்று வரை மதமேயாகத்தான் இருந்து வருகிறது.

ஈழத்தில் இப்பொழுது நடைபெறுவது களப்பிரர் காலம். இதிலிருந்து விடுதலை பெற இன்னும் பல நூற்றாண்டுகள் செல்லலாம். அதற்குக் காரணமாக இன்னுமொரு "பக்தி இயக்கம்" இருந்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

மதத்தை மதத்தினாலேயே வெற்றி கொள்ள முடியும், வரலாறு சொல்கிறது!

# முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி ஆசிரியர் பற்றாக்குறை

முல்லைதீவு வித்தியானந்த கல்லூரியில் ஆசிரியர் பற்றாக் குறையும் இரசாயன பரிசோதனைகூட உபகரணங்கள் பற்றாக் குறையும் காணப்படுவதாக தெரிய வருகின்றது. வன்னி பகுதியின் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னணி பாடசாலைகளில் ஒன்றான இப்பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை காரணம் ஆக பரீட்சை பெறுபேறுகளில் வீழ்ச்சியை எதிர்நோக்கலாம் என பழைய மாணவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இவ்வாறன குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக வன்னியை சேர்ந்த கல்வி அதிகாரி ஒருவர் நம்பிக்கை வெளிட்டுள்ளார். இருப்பினும் மாணவர் தொகை அதிகரித்து வருவது நம்பிக்கை தருவதாகவும் இதனை காரணமாக வைத்தே ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இயலும் எனவும் இந்த அதிகாரி மேலும் தெரிவுத்துள்ளார்.


மிக முக்கியமானதும் முன்னுரிமையானதும் உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பே...

Individual Life Insurance, Mortgage Insurance,
Disability Insurance, Critical Insurance,
Non-Medical Insurance, Travel Insurance

Registered Education Saving Plan (RESP)
Registered Saving Plan (RRSP)

Call
**Ravi Ponnudurai**
(Insurance Advisor)
Direct: 647-868-6475

*Even During Tough Times,*
*Life Insurance Offers Peace of Mind*

Get the right
Super Visa Insurance
best suited for your needs!



Super VISA

MEGA Financial Group
PH28 - 4168 Finch Aveune. E.
Scarborough, ON
M1S 5H6
Bus: 416-293 5559
Fax: 416-293 9409
www.megafinancial.ca

# மழையோடும் வெயிலோடும் மனம் போல் நடந்தான்

தமது சில்லறை இலாபங்களுக்காக மனித உணர்வுகளைப் பகடையாக்கும் தமிழ்த் தேசியப்பற்றாளர்கள் எனச் சொல்பவர்கள் இளையராஜாவின் இசைக்கச்சேரியை நிறுத்தச் சொல்லிக் கோருகிறார்கள். நவம்பர் மாதம் இசை நிகழ்ச்சிகள் கொண்டாட்டங்கள் எவையும் தமிழுலகில் செய்யப்படக் கூடாது என அவர்கள் கூச்சலிடுகிறார்கள்.

ஆனால் இது ஒன்றும் அந்த மொழி தாண்டிய அந்த இசைமேதையை எதுவும் செய்துவிடப்போவதில்லை.



மூன்றாம் பிறையின் மூலவர்கள்!

தன்னை வாழ்நாள் பூராவும் இசைக்காகவே வார்த்தெடுத்த ஒருவன் 1976 அன்னக்கிளி மூலம் சிகரத்தைத் தொட்டான். இன்று நாம் எல்லோருமே இலகுவாய் உச்சரித்துவிட்டுப் போகக் கூடியதாய் இருக்கின்ற பெயர் இளையராஜா. இசைபற்றிய அறிவோ அல்லது ஆசையோ இருக்கவேண்டும் என்பதில்லை அதற்கு.

தமிழ்ச்சினிமாவிற்கு கிடைத்த மிகப்பெரிய பொக்கிசம் ராஜா. அந்தப் பொக்கிசத்தை தமிழ்ச்சினிமா தக்க முறையில் ஆரம்பத்தில் பயன் படுத்தவில்லை என்றாலும் தற்போது தவறியும் விட்டுவிடக்கூடாது என்பதில் அது கவனமாக இருக்கிறது.

தன்வாழ்நாளில் மழையிலும் வெயிலிலும் தன் மனம்போல் நடந்த அந்த இசைமேதை கண்டு கொள்ளாமல் விட்டதையோ அல்லது தன்மீது கவனப்படுத்துவதையோ பொருட்படுத்துவதில்லை. தனக்குள் ஒரு கர்வத்துடன் இறுக்கமான இரும்புத் திரையுடன் கடந்து வந்திருக்கிறது அந்த இசை மேதை. இந்தப் பத்தியில் இசை மேதை என்றும் இசை ஞானி என்றும் மேஸ்ரோ என்றும் நான் பயன்படுத்தும் வார்த்தைகள் பாழாய்ப் போன தமிழ் வாய்களால் இதுவரை உச்சரிக்கப்பட்ட வார்த்தைகளே. அதையே நானும் இதில் பயன்படுத்துகிறேன்.

தமிழகத்தில் எல்லாத் தளங்களையும் முடிந்தவரை தமது சட்டகங்களுக்குள் கையகப்படுத்திய பார்ப்பனீயம் தமிழ்ச் சினிமாவினையும் தமது கைகளுக்குள் இறுக்கியது. இயக்குனர் சிகரங்களையும் பெரும் பிரமாண்ட, ஜாம்பவான் இயக்குனர்களையும் கொண்டிருந்த தமிழ்ச்சினிமாவில் இளையராஜாவின் மவுனமான இரும்புத்திரை பலரை விலகவைத்தது. ராஜாவின் கர்வம் அவரது நண்பர்களையும் மிகத் தூரக் கொண்டுபோய்விட்டது. ஆனாலும் மிக அமைதியாக தனது இசைமூலம் அவர் மக்களோடு அண்மித்துக் கொண்டிருந்தார்.

”இளையராஜா தனிச்சிறப்புடைய ஒரு இசைக் கலைஞரோ, விதந்தோதப்பட வேண்டிய, உன்னதப்படுத்தி மகிழவேண்டிய ஒரு படைப்பாளரோ அல்ல. அவரும் சாதாரண திரை இசை அமைப்பாளன்தான். இன்னும் சொல்லப் போனால் உலகத் தரத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லத்தக்க அளவில் ரஹ்மான், ஹாரீஸ் ஜெயராஜ் முதலானோர் இசைக்கட்டுமானங்கள் அமைத்து வெகுசனப் படுத்தியது போல சாதிக்க முடியாமல் அடுத்த கட்ட இசைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாமல் போன, ஒரு தேக்கத்தை அடைந்த, நமது காலத்தின் இசை என்ன என்பது பற்றி சிந்திக்கத் தவறிய ஒரு தோல்வியாளர். என்றும் எல்லா வகையிலும் தேங்கி உளுத்துப்போன கர்நாடக சாஸ்திரிய இசையைத்தான் நமது மரபிசையாகவும் தனது புதிய பரிணாமத்தின் தளமாகவும் ஏற்றுக்கொண்டவர். சனாதனத்திடம் சரணடைந்தவர். சமகாலப் பிரக்ஞை யிலிருந்துதூரவிலகியவர். மேலும் இந்த மண்ணுக்குரிய, இந்தக் காலத்துக்குரிய இசையை உருவாக்கத் தவறியவர்.” என்று புத்திசீவிகள் மட்டத்தில் கூட கேவலப்படுத்தப்பட்டவர் இளையராஜா.

ஆனால் சினிமா ஜம்பவான்களையும் எழுத்துலக ஜம்பவான்களையும் தனது அமைதியான இசைமூலம் கேலிக்குரியதாக்கித் தகர்த்தெறிந்து வந்தவர் ராஜா.

இன்றிருக்கின்ற இசையுலகில் ராஜாவிற்காக நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. அந்த இசைகளே சாட்சியம். ஆனால் இத்தனை தடைகளையும் தகர்த்த ராஜாவிற்கு எதிராக இன்று புதிதாக எழும்பியிருக்கிறது இன்று தமிழ்த் தேசியம். தமது சில்லறை இலாபங்களுக்காக மனித உணர்வுகளைப் பகடையாக்கும் தமிழ்த் தேசியப்பற்றாளர்கள் எனச் சொல்பவர்கள் இளையராஜாவின் இசைக்கச்சேரியை நிறுத்தச் சொல்லிக் கோருகிறார்கள். நவம்பர் மாதம் இசை நிகழ்ச்சிகள் கொண்டாட்டங்கள் எவையும் தமிழுலகில் செய்யப்படக் கூடாது என அவர்கள் கூச்சலிடுகிறார்கள்.

ஆனால் இது ஒன்றும் அந்த மொழி தாண்டிய அந்த இசைமேதையை எதுவும் செய்துவிடப்போவதில்லை.

இன்று அழுகிப்போன தமிழ்த்தேசியம் பேசும் தமிழக சினிமாக்காரர்களும் நாம் தமிழர் கட்சியினரும் கனடிய இசைக்கச்சேரியை நிறுத்தச் சொல்லும் மற்றைய தமிழக அமைப்பினரும் முதலில் நமக்கு முன்மாதிரியாகச் செயற்படவேண்டும்.

இவர்கள் நவம்பர் மாதங்களில் தமிழகத்தில் திரை அரங்குகளை மூடியும் மற்றும் அனைத்துச் சினிமாச் செயற்பாடுகளை ரத்துச் செய்தும் நவம்பர் மாதத்தை தமது கறுத்த மாதமாக்கிக் காட்ட வேண்டும். அதன் பின் மற்றவர்களது செயற்பாடுகளைத் நிறுத்தச் சொல்லவேண்டும். அதுதான் நேர்மை.

அப்படிப் பார்த்தாலும் நாம் கேட்டபதற்கிணங்க கறுப்பு ஜூலை, இனப்படுகொலை மே, மாவீர நவம்பர் என்று நாம் நினைவு கொள்ளும் பல மாதங்களில் அவர்கள் சினிமாவில் இருந்து தூர விலகியிருக்க வேண்டும். அதனைச் செய்ய மாட்டார்கள் அவர்கள் பிழைப்புப் போய்விடும்.

ராஜா தமிழுக்குமட்டும் இசையமைத்த தமிழ் இசையமைப்பாளனாக என்றுமே இருந்ததில்லை. அவர் மொழி தாண்டிய சிகரம். தமிழுக்கு கிடைத்த கவுரவங்களை விட பிறமொழிப்படங்களிலே அதிகம் பாராட்டப்பட்டவர். விருதுகளை வென்றவர். 1985 ல் வெளிவந்த தெலுங்கு சாகர சங்கமம் தொடக்கம் சிம்பொனி ஈறாக அண்மையில் வெளிவந்த பா திரைப்படம் வரையும் உலக இசையாளனாக இருக்கும் அந்த மாமேதையை வெறும் தமிழுணர்வுகளுக்குள் நாம் சிக்கவைத்துவிடமுடியாது. அவரது இசை மொழி தாண்டிய இசை. தனது இசைப்பயணத்தில் வந்த இடர்களை விட இது ஒன்றும் பெரிய இடரல்ல அவருக்கு. என்னைப் பொறுத்தளவில் அந்த மேதை இதற்குப் பதில் சொல்லவே கூடாது.

கற்சுறா


## கனடியப் பிரஜா உரிமை மாற்றங்கள் பற்றிய அறிவித்தல்!



செய்தி: கனடாவில் புதிய பிரஜைகள் தங்கள் வாழ்வில் வெற்றி பெற ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் கருத்துப் பரிமாறும் திறமையைக் கொண்டிருத்தல் அவசியம்.

கனடா பிரஜா உரிமைக்கு விண்ணபிக்க விரும்புகின்றீர்களா?

விண்ணப்ப படிவம் நிரப்பி அனுப்ப உதவிகள் தேவைப்படுவோர் நாடவேண்டிய தொலைபேசி எண்

416 269 5883

# காரை வசந்தம்! இதமான வசந்தத்தில் இன்பமான பதிவுகள்!



காரைநகர் மக்களின் ”கனடா காரை கலாச்சார மன்றத்தின்” நிகழ்வுகள் கடந்த அக்டோபர் 7 இல் சீன கலாச்சார மண்டபத்தில் நிறைவுற்றது. இந்நிகழ்வுகளில் இதனை ஒருங்கமைத்து வெற்றி கண்ட இந்த மன்றத்தின் செயற்குழு பாராட்டிற்குரியது.

முதலில் காரைநகர் வந்த வழிதோன்றல்களின் குழந்தைகள் அவர்தம் நிகழ்வுகளை திறம்பட தயாரித்து மேடையேற்றியது வரவேற்பிக்குரியது. நிகழ்வுத் தொகுப்புக்களை தயாரித்த முறை அதன் நெறியாள்கை போன்றவை விசேடமாக ரசிக்கக் கூடியதாய் இருந்தது.

பல்வேறு சிறுவர் சிறுமியினர் பங்கேற்ற போதிலும் கர்நாடக இசை இந்த வசந்தத்தில் தனி இடம் பெற்றதை மறுக்க முடியாது. இதற்கு மூன்று தனிக் கச்சேரிகளை குறிப்பிட்டாலும் கூட அமுதீசர் சச்சிதானந்தன் அவர்கள் வழங்கிய லயாமுதம் பார்வையாளர்களினால் பெரிதும் பாராட்டுப்பெற்றது. அமுதீசர் அவர்களின் தெளிவான சுயாதீனமும் அவரது சங்கீத வெளிப்பாடும் மெச்சத்தக்கது.

இதேபோல நடனங்கள் மிக போற்றத் தக்கதாய் அமைந்த போதிலும் நிரோதினி பரராஜசிங்கத்தின் தயாரிப்பில் மேடையேறிய ”வசந்தக் களிப்பு” நாட்டியம் அனைவர் பாராட்டையும் பெற்றது.

இந்த வசந்தம் இன்னொரு பாரிய தாக்கத்தையும் எம்மவர் மத்தியில் ஏற்படுத்தியது. அனனத்து ஊடகம் சார்ந்த பலர் ஒரே மேடையில் தோன்றியது அனைவர் மனத்திலும் கண்கொள்ளா காட்சியாய் அமைந்தது. இவர்கள் அனைவரும் வானலையின் வரிகள் என்ற இளையதம்பி தயானந்தாவின் புத்தக வெளியீட்டுக்காய் ஒரே மேடையில் அமைந்திருந்தனர்.



## அதிரும் அரங்கம்



சிதம்பரக்கூத்தன்

இந்த வசந்தம் இன்னமும் சிறப்பாய் அமைவதற்கு சில தடைகள் தென்பட்டன. நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் மூவர் இருந்தும் காரைநகர் பல்வேறு வானொலி அறிவிப்பாளர்களை கொண்ட பூமியாக இருந்த போதிலும் தகுந்த அறிவிப்பாளர் ஒருவரை மட்டும் பயன்படுத்திருந்தால் நிகழ்வு இன்னும் சிறக்கும். Luxury வறுமை என்ற நாடகம் சிரிக்க வைத்தாலும் கூட இடைவேளை கிடையாத நிகழ்வில் சற்று களை இழந்தே தெரிந்தது.

அடுத்த வசந்தம் முழுமையான நிறைவோடு வருமென்ற எதிர்பார்ப்பில் காரை மக்கள் விடை பெற்றார்கள்.


உங்கள் நினைவுகளை நிரந்தரமாக்க...

கொடாக் நிறுவனத்தின் நவீன புகைப்பட அச்சு இயந்திரங்களில் உங்கள் புகைப்படப் பிரதிகளை அச்சிட்டுக் கொள்ளுங்கள்.




நூறு வருடங்களுக்கு மேல் பாதுகாக்கப்படக் கூடிய பிரதிகள்!

8 x 10 அளவிலான பிரதிகளை நீங்களே அச்சிட்டுக் கொள்ளலாம்.

உங்கள் படங்களுடன் கூடிய கலண்டர்கள், வாழ்த்துக்கள், அழைப்பிதழ்கள்

உங்கள் கமெராக்களில் உள்ள மெமரி கார்ட்களிலிருந்தும், உங்கள் செல்லிடப் பேசியிலிருந்து Bluetooth மூலமாகவும் படங்களை அச்சிடலாம்.

உங்கள் படங்களிலிருந்தும் நேரடியாக பிரதிகளைப் பெறலாம்.

Palm Print Inc.

1345 Morningside Ave #8 Tel:416 284 9545



உங்கள் பொதிகள் ஸ்ரீலங்காவை சென்றடைய... எங்களை அழையுங்கள்!

Ceycan Transcontinental Shipping Inc.

Sole agents for Ceylon Shipping Lines in Canada

INTERNATIONAL FORWARDING & LOGISTICS

SRI LANKA'S BEST CLEARING FACILITIES IN COLOMBO & KANDY




For further information contact

குமார் or Sherman Fernando - 905.673.9873

Vancouver : Randy - 604 273 4911 / Edmonton : 780 918 2501

Montreal : Gana - 514 573 0093

INTERNATIONAL OFFICES :

United Kingdom
Transcontinental Shipping
Ashley House, 235 High Road
Suite 412, Woodgreen, London
0208 889 8486

Sri Lanka, Colombo
Ceylon Shipping Lines
294/10 D. R. Wijewardena Mawatha,
Colombo 10
94 11 2459234

Sri Lanka, Kandy
Ceylon Shipping Lines
175 Paranagantota Road,
Mawilmada, Kandy
94 08 2234356

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9

Email : ceycantrans@gmail.com web: ceycantranship.com

# 'அற்புதத்' தலைவரும் அவரது ஊழியர்களும்

## தர்சன்




**இந்தத் தாக்குதல் உத்திகளிலொன்றுதான் ஸ்மிதர்மன் ஒரு 'gay' என்பதனை மறைமுகமாகச் சுட்டிக்காட்டிய கீழ்த்தரமான பிரச்சாரம்.**

ஜனநாயகம் என்னவோ மக்களுக்குத் தமக்கான தலைவர்களைத் தெரிவுசெய்யும் அதிகாரத்தை வழங்கியிருக்கிறதுதான். ஆனால், அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் பெரும்பான்மையினர் எப்போதுமே பொறுப்புணர்வுள்ள, மக்கள் நலன் சார்ந்த தலைவர்களைத் தெரிவுசெய்வார்கள் என்பதற்கில்லை.

இதற்கு நல்ல உதராணம் ரொப் ஃபோட் போன்ற 'அற்புதத்' தலைவரெல்லாம் ரொறன்ரோ நகரத்தின் மேயராகத் தெரிவு செய்யப்படுவது.

2010ல் நடைபெற்ற மேயர் தேர்தலில் ரொப் ஃபோட் போட்டியிடப் போவதாக அறிவித்தபோது அவரே நம்பினாரோ தெரியாது தான் ரொறன்ரோ நகரத்தின் மேயராகத் தெரிவுசெய்யப்படுவேன் என்று.

மேயர் தேர்தலில் போட்டியிடுவோர் எல்லோருமே வெற்றியை எதிர்பார்த்துப் போட்டியிடுவதில்லை. தமது பெயரை, அரசியல் நிலைப்பாடுகளைப் பிரபல்லியப்படுத்துவதற்காக போட்டியிடுபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தமது எதிர்கால அரசியல் ஆதாயங்களை மனதில்கொண்டே இப்படியான தேர்தல்களில் போட்டியிடுவார்கள். உடனடி வெற்றியை அவர்கள் பெரிதும் எதிர்பார்ப்பதில்லை. காரணம், தாம் வெற்றிபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவென்று அவர்களுக்கே தெரியும்.

2010ல் ரொப் ஃபோட் மேயேராகத் தெரிவுசெய்யப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆரம்பத்தில் அரிதாகவேஇருந்தது. மேயர்தேர்தலில் போட்டிடுவதற்கு முன் நகர சபை உறுப்பினராக இயங்கிய காலத்தில் ஃபோட்டின் செயற்படுகளொன்றும் மெச்சும்படியாக இருக்கவில்லை.

இந்த செயற்பாடுகள் சக உறுப்பினர் மத்தியில் இவருக்கு பெரும்மதிப்பைப் பெற்றுக் கொடுக்கவில்லை. பொதுமக்கள் மத்தியிலும் ஃபோட் பெரிதாகவொன்றும் பிரபலியமாகவும் இருக்கவில்லை.

இந்த நிலையில்தான் அவர் மேயருக்கான தேர்தலில் போட்டியிட்டார். ஜோன் ரோறி போன்ற மிதவாத வலது சாரிகள் போட்டியில் இறங்காமற்போக ரொறன்ரோவின் வலதுசாரித் தேர்தல் இயந்திரம் ஃபோட்டின் வெற்றிக்காக தீவிரமாக இயங்கத்தொடங்கியது.

இந்த இயந்திரம் ஃபோட்டுக்கு எதிராகப் போட்டியிட்ட முதன்மை வேட்பாளரான ஜோர்ஜ் ஸ்மிதர்மனைப் பல்வேறு உத்திகளைப் பாவித்துத் தாக்கியது.

இந்தத் தாக்குதல் உத்திகளிலொன்றுதான் ஸ்மிதர்மன் ஒரு 'gay' என்பதனை மறைமுகமாகச் சுட்டிக்காட்டிய கீழ்த்தரமான பிரச்சாரம்.

ரொப் ஃபோட்டின் தேர்தல் பிரச்சாரத்துக்கு பொறுப்பானவர்கள் இந்தக் கீழ்த்தரமான பிரச்சாரத்துக்கும் தங்களுக்கும் சம்மந்தமில்லையென்று தேர்தல் காலத்தில் கூறியிருந்தார்கள்தான். ஆனால், மேயராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்பு ஃபோட் நடைபெற்ற ஒவ்வொரு 'Pride' கொண்டாட்டங்களையும் தவிர்த்தே வந்திருக்கிறார் என்பது இங்கு சுட்டிகாட்டப்பட வேண்டியது.

வலதுசாரி தேர்தல் இயந்திரம் உதவியதால் சாத்தியமேயில்லையென்று பலராலும் நம்பப்பட்ட விடயமொன்று சாத்தியமானது. ரொறன்ரோ நகரத்தின் 64வது மேயராக ரொப் ஃபோட் தெரிவுசெய்யப்பட்டார்.

ஃபோட்டின் தெரிவிற்கு கணிசமான சிறுபான்மையின மக்கள் தமது 'பொன்னான' வாக்குகளை வழங்கியிருந்தனர்.

இந்த வாக்குகளுக்கு பிரதியுபகாரமாக சிறுபான்மையினத்தவர்களுக்கு மேயர் ஃபோட்டின் அலுவலக ஊழியர்கள் ஏதாவதொரு ஊழியத்தைச் செய்யத்தானே வேண்டும். செய்தார்கள். செய்ததாகத்தான் சுயாதீனமாகச் செயற்படும் ரொறன்றோ நகரின் குறைகேள் அதிகாரி ஃபியோனா கிறீனின் (Fiona Crean) அறிக்கை கூறுகிறது.

நகரசபையின் கீழ் இயங்கும் 120 சிவிக் குழுக்களில் அங்கம் வகிக்கப்போவோருக்கான தேர்வு விடயத்தில் ஃபோட் அலுவலக ஊழியர்கள் தலையிட்டிருக்கிறார்கள். சிறுபான்மையினத்தை சார்ந்தவர்களின் விண்ணப்பங்களை ஊக்குவிக்கும் வசனத்தை/வசனங்களை விண்ணப்பங் கோரும் அறிவித்தல்களிலிருந்து நீக்கச் சொல்லி நகரசபை ஊழியர்களிடம் கேட்டிருக்கிறார்கள். சிவிக் குழுக்களில் அங்கம் பெறப்போவோருக்கான தேர்வை ஒழுங்கான முறையில் நடாத்தத் தடையாக இருந்திருக்கிறார்கள். ரொறன்ரோ ஸ்டார் போன்ற கூடுதலான வாசகரைக்கொண்ட பத்திரிகைளில் விண்ணப்பம் கோரும் அறிவிப்புகளை வெளியிடாமல் ஃபோட்டுடன் நட்பாக நடந்துகொள்ளும் ஊடகங்களில் அறிவிப்புக்களை வெளியிட்டிருக்கிறார்கள். விளைவு, 120 சிவிக் குழுக்களிலும் மிகக் குறைவான சிறுபான்மையினத்தவரே அங்கம் வகிக்கிறார்கள்.

இதுதான் கணிசமான சிறுபான்மையினத்தவர்களின் ஆதரவால் ஆட்சிக்கேறிய ஃபோட் நிர்வாகம் சிறுபான்மையினருக்கு செய்த பிரதியுபகாரம். ■

**இதுதான் கணிசமான சிறுபான்மையினத்தவர்களின் ஆதரவால் ஆட்சிக்கேறிய ஃபோட் நிர்வாகம் சிறுபான்மையினருக்கு செய்த பிரதியுபகாரம்.**


# வகைபடு சிறு விளம்பரங்கள்

நீங்கள் வீடு வாடகைக்கு கொடுக்கிறீர்களா? கணனி விற்பனைக்கு உள்ளதா? வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டா? கார் விற்பனைக்கு உண்டா? வருமான வரி சேவைகள் வழங்குகிறீர்களா?

விற்பனைக்கு உள்ள பொருட்கள், வழங்கும் சேவைகள் எதுவாயினும், பூபாளம் பத்திரிகையிலும் இணையத் தளத்திலும் விளம்பரம் செய்யுங்கள். ஒரே கட்டணத்தில் பத்திரிகையிலும், இணையத்திலும் விளம்பரம் செய்யலாம்.

**416 284 4004**

**www.boobalam.com**
**boobalam@ymail.com**

## Private Tuition Classes

Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12
Siva
**416 271 8467**
**416 265 9138**

## Basement For Rent

2 bedrooms, kitchen, bathroom and living room. It was newly renovated this year. Has a shared laundry room. Its 5-10 minute walk from 3 different elementary schools so its a good location for families with kids. 1-2 minute walk from a TTC bus stop. Reasonably close to Scarborough Town Center (5-10 minute TTC) and Cedarbrea Mall (10-15 minute TTC)

**647-273-7340 (Siva)**
WILL NOT BE AVAILABLE UNTIL MID TO LATE NOVEMBER

## For Rent

very very comfortable 3 bedroom bungalow
or 3 vast single rooms available!
Family or bachelors
416 289 0003
416 836 7760


# கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 20 வது ஆண்டு மலர்

எமது இணையம், அடுத்த ஆண்டு தனது 20 வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதன் நினைவாக, மலர் ஒன்றை வெளியிட நாம் முடிவு செய்துள்ளோம். அதற்காக உங்களிடமிருந்து தகுதியான ஆக்கங்களை, கட்டுரையாகவோ, கவிதையாகவோ, சிறுகதையாகவோ எதிர்பார்க்கின்றோம். தயவுசெய்து அவற்றை canadatamilwriters@gmail.com என்ற எமது மின்னஞ்சலுக்கு நவம்பர் மாதம் 30 ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு உங்களை அன்புடன் கேட்கின்றோம்.

அத்துடன் நவம்பர் மாதம் 9 ம் திகதி முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6 மணி முதல் 8:30 மணி வரை எழுத்துப் பட்டறை ஒன்றை Scarborough Civic Centre இல் நடாத்தவும் நாம் தீர்மானித்துள்ளோம். அதற்கும் உங்களின் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம். தொடர்புகளுக்கு 416-284-9158, 416 4299784

தலைவர், செயலாளர் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்

### கூட்டமைப்புக்குள்...

சேர்ந்து ஒரு பங்கு என்ற கணக்கில் பங்கீடு செய்யபட்பட்டதாயும் மனங்குமுறினர் அங்கத்துவக் கட்சியினர். அதிலும் தலைமை வேட்பாளர்களாக தமிழரசுக் கட்சியினரே நிறுத்தப்பட்டனர். தேர்தல் பெறுபேறின் பின்னரும் மனவருத்தம் தொடர்ந்தது. மட்டக்களப்பில் அதிக எண்ணிக்கை பெற்ற வேட்பாளரான ராசையா துரைரட்ணத்தை எதிர்க்கட்சித் தலைவராக்கக் கோரியபோதும் அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. அவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர். எல்.எப் ற்கு ஒதுக்கிய நியமனத்தில் தேர்தல் கேட்டதாலேயே அவரை விடுத்து தமிழரசுக் கட்சியைச் சார்ந்த ஒருவருக்கு அப் பதவி வழங்கப்பட்டதென்பது சுரேஷ்தரப்பின் மனக்குமுறல்.

இதை இப்படியே விட்டுச் சென்றால் தாம் நாளடைவில் செல்லாக் காசாகிவிடுவோம் என்ற அச்சம் அங்கத்துவக் கட்சிகளுக்குப் பற்றிக் கொண்டது. எனவேதான் முன்னர் தோல்வியடைந்த முயற்சியை -தமிழ் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதியும் முயற்சியை ... மீண்டும் தொடங்கியிருக்கின்றனர் மற்றைய அங்கத்துவக் கட்சிகள் - ஆனால் இம்முறை பகிரங்கமாக. இது உடைவுக்கு இட்டுச் செல்லலாம் என்பது தெரிந்தும் தொடங்கியிருக்கின்றனர்.

அவ்வாறு உடைய நேரிட்டால், மற்றைய கட்சிகள், கூட்டமைப்புக்கு வெளியால் உள்ள சில கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு ஒரு புதிய கூட்டை ஆரம்பிக்கலாம் என்பது அவர்களது எண்ணம். அப்படியான சந்தர்ப்பத்தில், பேச்சுவார்த்தைகளுக்கு கூட்ட மைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சியினரால் செல்ல முடியாது போகும். வெளிநாட்டு நிதி சேகரிப்புக்கும் கூட்டமைப்பின் பெயரைப் பயன்படுத்த முடியாது போகும். ஒற்றுமைக்குப் பங்கம் விளைவித்த குற்றச்சாட்டை அதுவே சுமக்க நேரிடும். தேர்தலென்று வந்தால் தமிழரசுக் கட்சி செயற்பாட்டாளர்கள் பற்றாக்குறையை எதிர்நோக்க நேரிடும் - இவைதான் அங்கத்துவக் கட்சிகளின் கணிப்பீடு.

**ஆனந்தசங்கரி, முன்னரே புலிகளால் துரோகி என்ற முத்திரை குத்தப்பட்டு விட்டாரென்பதால் அவரும் தமக்கு சவாலல்ல என்பது அவர்கள் எண்ணம். எனவே தம்மை விட்டு விலகினால் கஜேந்திரகுமார் அணிக்கு நேர்ந்த கதிதான் இவர்களுக்கும் ஏற்படும் என்று கருதுகிறது தமிழரசுக் கட்சி.**



ஆனால் தமிழரசுக் கட்சியோ, தமக்கான மக்களாதரவின் குடையின்கீழ்தான் ஏனய கட்சிகள் சுகம் காண்கின்றன என்று கருதுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தவிர ஏனய கட்சிகளை முன்னாள் ஆயுதக் குழுக்கள் என்ற வசனத்தால் அடித்துவிடலாம் என்பதும் அவர்களின் கணக்கு. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, முன்னரே புலிகளால் துரோகி என்ற முத்திரை குத்தப்பட்டு விட்டாரென்பதால் அவரும் தமக்கு சவாலல்ல என்பது அவர்கள் எண்ணம். எனவே தம்மை விட்டு விலகினால் கஜேந்திரகுமார் அணிக்கு நேர்ந்த கதிதான் இவர்களுக்கும் ஏற்படும் என்று கருதுகிறது தமிழரசுக் கட்சி.

எனினும் அது இவற்றை நம்பி சும்மாயிருக்கவில்லை. தனது பக்க வேலைகளில் அதுவும் இறங்கி விட்டிருக்கிறது. முதலில் மறுபக்க அணியின் முனைப்பாக செயற்படும் சுரேஷ் பிரேமச்சந்திரனை அரசியல் ரீதியில் ஓரம் கட்டுவதற்கான வேலைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளில் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு அதிகம். அத்துடன் முரசொலி, மற்றும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகையான உதயன் ஆகியவற்றின் உரிமை யாளரையும் தமிழரசுக் கட்சி யில் சேர்த்து பாராளுமன்ற உறுப்பினராக்கியுள்ளனர். இவர்கள் மூலம் பத்திரிகைகளில் சுரேஷை ஒரு குழப்பல்வாதியெனவும் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்க முனைகிறாரென்றும் சித்திரிக்கத் தலைப்பட்டுள்ளனர். அதேவேளை இந்தியா போன்ற சர்வதேச சக்திகளிடையே அவரை தீவிர போக்கைக் கடைப்பிடிப்பவரென்று கூறி, அவர்களிடமிருந்து விலக்கும் முயற்சியையும் மேற் கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களிடையே தம்மையே நிதானமான அனுகுமுறையை மேற் கொள்பவர்களாகவும் ராஜதந்திரம் தெரிந்தவர்களாகவும் சர்வதேச சக்திகளின் அங்கீகாரத்தைப் பெற்றவர்களென்றும் அபிப்பிராயத்தை ஏற்படுத்தி, மற்றைய தரப்பினரால் பயனில்லை என்று காண்பித்து வருகின்றனர்.

இந்தப் பலப்பரீட்சை எவ்வளவு தூரம் செல்லப்போகிறது, ஒவ்வொரு தரப்பும் என்னென்ன உத்திகளைக் கையாளப் போகின்றன, இது உடைவைக்காணமுன்தீர்க்கப்படுமா, இல்லை உடைவேதான் தீர்வாக அமையுமா, அப்படி உடைந்தால் புதிய கூட்டொன்று அமையுமா, அமைந்தாலும் அது தமிழரசுக்கட்சியின் இன்றைய செல்வாக்கை முறியடித்து தன்பக்கம் மக்களாதரவைத் திரட்டிக்கொள்ளுமா, என்பன கேள்விகள்.

இவற்றுக்கு மத்தியில் எமது அரசியல் தீர்வின் கதி என்ன என்பதும், எதிர்பார்ப்புகளுடன் காத்திருக்கும் தமிழ் மக்களின் தலைவிதி என்ன என்பதும் யாருக்குத் தெரியும்?

# மரண அறிவித்தல்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலமுரளீதரன் காயத்திரி செவ்வாய்க்கிழமை (09.10.2012) அன்று காலமானார்.

அன்னார் பாலமுரளீதரனின் (ஆசிரியர், மு.்வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, மாங்குளம்) அன்புமனைவியும், நற்குணசிங்கம் பேரின்பநாயகி தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற பசுபதி மற்றும் வில்வராணி தம்பதியரின் அன்புமருமகளும், ஆதிரையன் (யாழ். இந்து கல்லூரி), ஆரூரன் (யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை), ஆரணன் ஆகியோரின் பாசமிகு தாயும், சிவகரன் (லண்டன்), கௌரிபாலன் (லண்டன்), சிவகௌரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி கௌ ரீஸ்வரி, திருமதி சிவநேசராணி, விஜிந்தன், பாலகுமரன் (மோகன்), பாலரஞ்சன், பாலமுகுந்தன் ஆகி யோரின் மைத்துனியும், பாலினி, ஜெயந்தி, சசிகலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (11.10.2012) அன்று அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.30 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



**திருமதி பாலமுரளீதரன் காயத்திரி**
**(ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்)**

தகவல் :
பாலமுரளீதரன் (கணவர்),
க. நற்குணசிங்கம் (தந்தை).

தொடர்பு:
பாலமுரளீதரன் (கணவர்),
க. நற்குணசிங்கம் (தந்தை).
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# வாழும் இசைப் பொக்கிஷம் மெல்லிசை மன்னன்




**சங்கமி**

**பிறந்த நாள் தொடங்கி இறக்கும்வரை ஏதோவொரு வகையில் பாடல்களை கேட்டுக்கொண்டே இருக்கிறோம். எந்த ஒரு பாடலையும் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுவது அப்பாடலுக்கு அமைத்திருக்கும் இசைதான் முக்கியகாரணம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான இசை பிடிக்கும். அதனால் தான் விதவிதமான இசையில் தினம்தோறும் பாடல்கள் வெளிவருகின்றன.**

இசை என்றால் என்ன, எந்தவிதமான ஒலிகளும் இல்லாத உலகம் எப்படி இருக்கும் என்று எப்போதாவது நினைத்து பாத்திருக்கிறீர்களா? அப்படியிருந்தால் வாழ்க்கையே மௌன நாடகம் போலும் இயந்திர மனிதர்கள் நடமாடுவது போல்தான் இருக்கும். அலைகடல் ஏற்படுத்தும் ஒலி, மழை பெய்யும்போது வரும் ஒலி, மனிதர்கள், விலங்குகள், பறவைகள், இயந்திரங்கள் ஏற்படுத்தும் ஒலிகள் என பூமியெங்கும் வியாபித்துள்ளது ஒலி, இந்த ஒலியை மெருகூட்டி சிற்பம் செதுக்குவதுபோல் செதுக்கி வித விதமான இசையை காதிற்கு இனிமையாக தருகிறார்கள் இசைக்கலைஞர்கள்.

பிறந்த நாள் தொடங்கி இறக்கும்வரை ஏதோவொரு வகையில் பாடல்களை கேட்டுக்கொண்டே இருக்கிறோம். எந்த ஒரு பாடலையும் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுவது அப்பாடலுக்கு அமைத்திருக்கும் இசைதான் முக்கியகாரணம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான இசை பிடிக்கும். அதனால் தான் விதவிதமான இசையில் தினம்தோறும் பாடல்கள் வெளிவருகின்றன.

இப்போதெல்லாம் எமக்கு விரும்பிய பாடல்களை எந்நேரமும் கேட்கக்கூடிய வகையில் புதிய எலெக்ட்ரானிக் கருவிகள் வந்து விட்டன. அதுவும் ஒவ்வொரு வாத்தியத்தின் ஒலியையும் மிகத்தெளிவாக கேட்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இந்த வசதிகள் அந்தக்காலத்தில் இல்லை அப்படியிருந்தும் எம் எஸ் விஸ்வநாதன்-டி.கே. ராமமூர்த்தி இருவரும் இசை அமைத்த பாடல்களை மீண்டும்மீண்டும் கேட்கத்தூண்டுவது அவர்களது இசைத்திறமையே.

அதிலும் இங்கு எம். எஸ். விஸ்வநாதனை மட்டும் குறிப்பிட்டு கூறுவதற்கான காரணம் அவரது சாதனைகள் நிறைந்த வாழ்க்கை. அவரது வரலாற்றை ஒருமுறை பின்னோக்கி பார்ப்போம். இவர் இந்தியாவின் கேரளமாநிலத்தில் பாலக்காடு என்கின்ற இடத்தில் 1928ம் ஆண்டு ஜூன்மாதம் இருபத்தினான்காம் தேதி சுப்பிரமணியன், நாராயணிகுட்டி என்ற மலையாளத்தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். அவரது நாலாவது வயதில் தனது தந்தையை இழந்தார், அதனால் ஏற்பட்ட வறுமை அவரது தாயார் தன்னையும், மகனின் உயிரையும் மாய்க்கத் துணிந்தார். அதிர்ஷ்டவசமாக வசமாக தாயாரின் தந்தையான கிருஷ்ணன் நாயர் அவர்களிருவருக்கும் ஆதரவளித்து வாழ்க்கை பாதையை மாற்றி யமைத்தார். விஸ்வநாதனுக்கு எந்தவிதமான இசைப்பின்னணியும் கிடையாது. ஆனால் அவருக்கு நடிப்பதிலும், பாடுவதிலும் ஆர்வமிருந்தது. அதை கற்றுக்கொள்ள வறுமை இடம் தரவில்லை. அதனால் தியேட்டர்களில் சிற்றுண்டிகள் விற்று தனது ஆசையை வளர்த்துக் கொண்டிருந்தார்.

அதன்பின் நீலகண்ட பாகவதரிடம் இசையைப் பயின்று தனது பதின்மூன்றாவது வயதில் திருவனந்தபுரத்தில்அரங்கேற்றினார். அதன்பின் சிலகாலம் சுப்பையாநாயுடு என்பவரின் நாடகக்குழுவில் பாத்திரங்கள் ஏற்று நடித்தார். பின் அங்கிருந்து வெளியேறி சி. ஆர். சுப்புராமன் என்பவரின் நாடாகக் குழுவில் ஹார்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தார் அப்போது வயலின் கலைஞரான டி.கே ராமமூர்த்தியை சந்தித்தார், எம் எஸ் விஸ்வநாதனை விட ராமமூர்த்தி ஏழுவயது மூத்தவர். இப்படி இருக்கும்போது 1952ம் ஆண்டு திடீர் சுகவீனம் காரணமாக சி.ஆர். சுப்புராமன் இறந்துபோனார். இறக்குமுன் அவர் சில படங்களுக்கு இசை அமைக்க ஒப்புக்கொண்டிருந்தார், அது பாதியிலே நின்று போயிருந்தது, அதற்கான மீதி இசை அமைக்கும் பொறுப்பை ஏற்று, எம் எஸ் விஸ்வநாதனும் டி.கே ராமமூர்த்தியும் சேர்ந்து இசை அமைத்தார்கள்.

அதன்பின் தொடர்ந்து இருவரும் பத்து வருடங்களுக்கு மேல்இசையமைத்துக் கொண்டிருந்தர்கள். 1963ம் ஆண்டு எம் எஸ் விஸ்வநாதனுக்கும், டி.கே. ராமமூர்த்திக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனால் மெல்லிசை மன்னர் என்ற பட்டம் இருவருக்கும் சென்னை திருவல்லிக்கேணி கலாச்சார அக்கடமி இல் வைத்து வழங்கப்பட்டது. இறுதியாக 1965 ம் ஆண்டு இருவரும் சேர்ந்து இசையமைத்த படம் ஆயிரத்தில் ஒருவன் இப்படத்தில் எம்.ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, நம்பியார், நாகேஷ், மனோகர் ஆகியோர் நடித்திருந்தனர். அந்த திரைப்படத்தில் வெளிவந்த பாடல்களில் முக்கியமாக அதோ அந்தப்பறவை போல வாழ வேண்டும் என்ற டி.ம். சௌந்தரராஜன் பாடிய பாடலும், திரைப்படத்தில் அப்பாடல் அமைந்த காட்சியையும் மறக்கமுடியாது. இத்திரைப்படத்திற்கு பின் எம் எஸ் விஸ்வநாதன் தனியே இசையமைக்க தொடங்கினார்.

1960 களில் இந்தியாவிலேயே முதன் முறையாக இசை நிகழ்ச்சியை மேடையேற்றியவர் என்ற பெருமைக்குரியவர். தமிழ் நாட்டின் தேசியகீதமான மனோன்மணியம் பொ. சுந்தரம்பிள்ளை இயற்றிய தமிழ் தாய் வாழ்த்துக்கு (நீராருங் கடலுடுத்த நிலமடந்தை கெழிலொழுகும் என ஆரம்பிக்கும்பாடல்) என்ற பாடலுக்கு எம் எஸ் விஸ்வநாதன் இசையமைத்துள்ளார். ஏறத்தாழ ஐநூறு பாடல்களுக்குமேல் சொந்தக்குரலில் பாடியுள்ளார் இதில் சினிமா பாடல்கள் தவிர்ந்த பாடல்களும் அடங்கும். இவர் தமிழ்நாடு மாநில விருதான கலைமாமணி விருது, சங்கம் கலைகூட்டத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது, சத்தியபாமா பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் பட்டம், கேரள கலாச்சார அமைச்சு வழங்கிய “seventh Kamukura” விருது, எனப் பல விருதுகளையும், அண்மையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மெல்லிசை சக்கரவர்த்தி என்ற விருதை வழங்கினார், ஆனால் இந்த மெல்லிசை மன்னனுக்கு தேசியவிருது மட்டும் கிடைக்கவில்லை, அது வழமையான தமிழ் புறக்கணிப்பு.

மேலும் தென்னிந்திய திரையுலகில் 1960-1970 ஆண்டுகளில் தனது இசைத்திறமையால் கோலோச்சியவர். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி போன்ற பலமொழிகளிலுமாக ஏறத்தாழ ஆயிரத்தி இருநூறுக்கும் மேற்பட படங்களுக்கு இசையமைத்தவர். நூற்றுக்கும் மேற்பட்ட வாத்திய கலைஞர்களுக்கு வாய்ப்பு கொடுத்து வாழ்வளித்த கலைஞன். இவர் தனது இசை நிகழ்ச்சிகளை ரஷ்யா, பிரான்ஸ், லண்டன், கனடா, டென்மார்க், அமெரிக்கா, மத்தியகிழக்கு நாடுகள், போன்றபல இடங்களில்நடத்தியுள்ளார். பீம்சிங், கிருஷ்ணன் பஞ்சு, திருலோகசந்தர், கே பாலச்சந்தர் ஆகிய நால்வரின் படங்களுக்கும் மிக அதிகமாக இசை அமைத்தவர். இளைய ராஜாவுடன் சேர்ந்து மெல்லத் திறந்தது கதவு, செந்தமிழ்ப் பாட்டு, செந்தமிழ் செல்வன் ஆகிய படங்களுக்கு இசையமைத்தவர். மனிதனின் நவரச குணங்களையும் மெட்டுக்களால் வேறுபடுத்திக் காட்டியவர்.

கீழைத்தேச, மேலைத்தேச இசை, பாரம்பரிய இசைகளை உள்வாங்கி கலந்து கட்டி பாடல்களுக்கு புதுமையாக இசையமைத்தவர் உதாரணமாக நினைத்தாலே இனிக்கும் படப் பாடல்களில் இனிமை நிறைந்த உலகம் இருக்கு பாடலின் இசை மேற்கத்திய இசைக்குப் பொருந்தும். புதிய பறவை படத்தில் முன்னூறுக்கும் மேற்பட்ட இசைக்கருவிகளை கொண்டு எங்கே நிம்மதி என்ற பாடலையும், பாகப்பிரிவினை படத்தில் தாழையாம் பூ முடிச்சு பாடலை மூன்று இசைக்கருவிகளை கொண்டும் இசையமைத்தார்.

நெஞ்சில் ஓர் ஆலயம் படத்தில் வந்த முத்தான முத்தல்லவோ பாடலை இருபது நிமிடங்களில் இசையமைத்தார். 1965 ம்ஆண்டு இந்தியா, பாகிஸ்தான் போரின் முடிவின் போது போர்முனை சென்று ஆர்மோனியத்தை கழுத்தில் மாட்டிக்கொண்டு காயமுற்ற படைவீரர்களுக்காக பாடினார். அதற்கு நடனம் ஆடியவர் நடிகர் சந்திரபாபு. இசையில் காலத்தால் அழியா முத்தான பாடல்களை தந்த இக்கலைஞன் பள்ளிக்கூடப் பக்கமே தலைவைத்து படுத்ததில்லை. எண்பத்திநாலு வயதாகும் இக்கலைஞனை மேலும் ஆரோக்கியமாக வாழ வாழ்த்துவோம்.

மெல்லிசை மன்னனின் பாடல்களில் கேட்டதில் பிடித்தது.

“அதிசயராகம் ஆனந்தராகம், நிலவே என்னிடம் மயங்காதே, தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு, மலரே குறிஞ்சி மலரே , பொன்மகள் வந்தாள், ஆணிபொன் தேர் கொண்டு, மௌனமே பார்வையால் ஒரு பாட்டு பாடவேண்டும், முத்துக்களோ கண்கள், அங்கே மாலை மயக்கம், ஆட்டுவித்தால் யாரெருவர், இசை கேட்டால் புவி அசைந்தாடும். இப்படி சொல்லிக்கொண்டே ......... போகலாம்.

Photocopies
From 4 cents
Palm Print
1345 Morningside Ave#8

பரம் ஜி பார்வையில்...

# தோல்வியின் ரகசியம்



**அரசியல் வேறு, விளையாட்டு வேறு என்பதனை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.**

உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன என வெற்றி பெற்றவர்களிடம் கேட்பதுண்டு ஆனால் தோற்பவரிடம் தோல்வியின் இரகசியம் பற்றி கேட்ப தில்லை. வெற்றியின் இரகசியத்தை அறிந்து கொண்டால் அது தோற்றவர்களிடம் இல்லை என்பதே தோல்வியின் இரகசியமாகும். சென்ற வாரம் கொழும்பில் நடந்து முடிந்த ரி-20 உலகக்கிண்ணத்திற்கான இறுதி போட்டியில் சிறிலங்காவிற்கு எதிராக விளையாடிய மேற்கிந்திய அணியினரின் அபாரவிளையாட்டு திறமையே அவர்களுக்கு வெற்றியை ஈட்டி கொடுத்திருந்தது. சிறிலங்கா அணி எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கு தேவையான தகுதிகளுடன் சாதகமான சூழ்நிலைகளை கொண்டிருந்த போதும் தோல்வியையே தழுவியது.

சென்ற வருடம் மும்பாயில் நடைபெற்ற உலக கிண்ணத்திற்கான ஓ. டி. ஐ, ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டியில் வெற்றி பெறுவதற்கு அன்றய சிறிலங்கா அணி இறுதிப்போட்டியில் விளையாட தகுதி பெற்றிருந்தது. இந்திய அணி சிறப்பாக விளையாடி கிண்ணத்தை வென்றது என்பதை விடவும் சிறிலங்கா அணி தாமே தோற்கும் வகையில் விளையாடி இந்திய அணியிடம் அதனை தாரை வார்த்து கொடுத்தது என எண்ணக்கூடிய வகையில் விளையாட்டு இருந்ததாக இறுதி போட்டியினை பார்த்து கணித்த பரம் ஜி அன்று சொல்லியிருந்தான். அதற்கான காரணம் அப்போது இரு நாடுகளுக்கும் இடையில் இருந்த அரசியல் நிலைமைகளை சமாளிப்பதற்காக இந்தியாவை தாஜா செய்ய முயன்ற மகிந்தாவின் கைங்கரியமாகவும் அது இருந்திருக் கலாம் என்பதே அவனது சந்தேகமாகவும் இருந்தது.

போட்டி முடிந்த சிலதினங்களில் தனது பதவியை இராஜினாமா செய்திருந்த சிறிலங்கா அணித்தலைவன் குமார் சங்கக்காராவின் அறிக்கைகளும் பேட்டிகளும் பரம் ஜியின் கணிப்புகளுக்கு ஆதராவாக வழிமொழிவது போல இருந்ததையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. ஆனாலும் அன்றைய போட்டியில் சிறிலங்கா தோற்று விட்டதாக கவலை கொள்ளாமல், கிறிக்கற் விளையாட்டில் பித்தர்களாக இருக்கும் பலகோடி இந்தியர்கள் மத்தியில் அவர்கள் மண்ணில் வைத்தே இலங்கை அணி வென்று முகத்தில் கரியைப்பூசி அவமானப்படுத்தியதாக கருதும் பகுத்தறிவற்ற மூடர்கள் பலரை, முக்கியமாக தமிழக தமிழர்களை, ஈழத்தமிழர்களின் ஆயுதப்போராட்ட தோல்வி கொடுத்த அவமானங்களுடன் சிறிலங்கா அணியிடம் பெற்ற விளையாட்டு தோல்வியையும் காரணம் காட்டி இழக்கவிருந்த உயிர்களை, அதாவது பல தற்கொலைகளை தவிர்க்க உதவியதாக எடுத்து ஆறுதல்கள் அடைய வேண்டும் என்றும் சொல்லியிருந்தான்.

ஒரு நாடு விளையாட்டில் பெறும் வெற்றியானது அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரினாலும் கொண்டாடப்பட வேண்டிய விடயமாகும். ஆனால் சிறிலங்காவில் போர் சூழல்கள் மறைந்து சில வருடங்களை கடந்துவிட்ட போதும் இதுவரையில் அந்நாட்டின் பிரஜைகளான எமது சிறுபான்மை தமிழினம் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் அனுபவித்து வரும் துயரங்களுக்கு ஓர் முடிவு காணாமல் இன்னமும் அரசியல் அடிமைகள் போல அம்மண்ணில் வாழ்ந்து வருகையில், கிரிக்கற் விளையாட்டில் வெற்றி பெற்று உலக கிண்ணத்தை சிறிலங்கா அணி பெறும் பட்சத்தில் அங்கு வாழும் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்கள் மட்டும் வெற்றிக்களிப்பில் இறுமாந்து கொண்டாடி மகிழாமல் இருக்கும் வகையில் இயற்கை கொடுத்த தீர்ப்பே சிறிலங்காவின் ரி-20 தோல்வி என நாம் எடுத்து கொள்ளலாம்.

இந்திய கிரிக்கற் அணியில் இருக்கும் தமிழரான ரவிச்சந்திரன் அஸ்வின் உலக கிண்ண போட்டியில் இருந்து வெளியேறி நாடு திரும்பியபின் தனது முகப்புத்தகத்தில் மேற்கிந்திய அணியைவிட சிறிலங்கா அணி சிறப்பானது என்றும் அதுவே இறுதியில் கோப்பையை வெல்லும் எனவும் தனது கணிப்பினை சொல்லி இருந்தமையை சிலர் அரசியலாக்கி, தமிழர்களை கொன்று குவித்த சிங்கள நாட்டு அணிக்கு அவர் ஆதரவு தெரிவிப்பதாக ஆட்சேபணை தெரிவித்திருந்தமையையும் காணக் கூடியதாக இருந்தது.

அரசியல் வேறு, விளையாட்டு வேறு என்பதனை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அஸ்வின் தெரிவித்து இருந்த கருத்தானது ஒரு கிரிக்கற் விளையாட்டு வீரனாக அவரது கணிப்பின்படி சிறிலங்கா அணி சிறந்தது எனவும், சிறந்த அணியே வெல்லவும் வேண்டும் என்பது மட்டுமே அவரது எதிர்பார்ப்பாகவுமிருந்தது. அதைவிட்டு சிங்கள அரசும் அதன் இராணுவமும் தமிழர்களை கொன்று குவிப்பதற்கு இருபக்கங்களிலும் இருந்த இனவாத அரசியல் தலைவர்கள் மற்றும் ஆயுத விடுதலை குழுக்களின் தலைமைகளின் நடவடிக்கைகளே காரணம் எனும் உண்மைகளை ஒட்டு மொத்த சிங்கள இனத்தின் மீதும் விளையாட்டு வீரர்கள் மீதும் பழியாகப் போடுவது ஒருபோதும் தமிழர்களுக்கு நன்மைகளை தராது.

மறுக்கப்பட்டு வந்த தமிழர் உரிமைகளை பொறுமையாக, ஜனநாயக வழிகளில் மீளப்பெறும் முறைகளை கைவிட்டு, மனித உயிர் மற்றும் உணர்வுகளின் பெறுமதிகள் பற்றி அக்கறை கொள்ளாமல் ஆயுதம் ஏந்தி, நாட்டின் இராணுவத்தை எதிர்த்து வென்று தமிழ் ஈழம் காண்போம் என்ற கற்பனை கனவுகளில் கண்மூடித்தனமான காரியங்கள் ஆற்றியதன் பலனாக எல்லையில் இருந்த சிங்கள இராணுவத்தை கொல்லை வழியாக வீட்டு தாழ்வாரங்கள் வரையில் வரவைத்து தமிழினம் அங்கு அழிக்கப்படுவதற்கு முழுக்காரணமாக இருந்தவர்களே எமது இனம்தான் எனும் உலகறிந்த உண்மைகளை ஆயுதப்போராட்ட தோல்வியின் இரகசியங்களாக பூட்டி பாதுகாக்க முனைபவர்களின் போக்குகள் தமிழ் மக்களுக்கு அந்த மண்ணில் விரைவில் விமோசனமே கிடைக்கப்போவதில்லை என்பதன் அறிகுறிகள் என நாம் எடுத்து கொள்ளலாம்.

பார்வைகள் தொடரும்...

---

தமிழ் அமுதம்

# காலத்தை அறிந்து கொள்ளுங்கள்!

**இரா.சம்பந்தன்**

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்று அதன்
குத்து ஒக்க சீர்த்த இடத்து!

அலைகள் வந்து மோதும் அழகான கடற்கரை அது. அங்கே மேனி நனைத்துக் கிடக்கின்ற பாறைகளின் மீது பெருந்தொகையான நீர்ப் பறவைகள்! அவற்றின் மத்தியில் தான் எத்தனை பரபரப்பு. சில கடலில் பாயந்து மீன் தேடித் திரும்புகின்றன. சில நீண்ட சிறகுகளை விரித்துப் படபடக்கின்றன பெரும் குரலோடு! சில ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொள்கின்றன அன்போடு! இரை திருட வரும் உறவுகளைக் கொத்திக் கலைக்கின்றன வேறு சில! பாறைகளின் நின்று உச்சியில் அலகு தேய்த்துக் கொள்கின்றன இன்னும் சில!

அந்தக் கடற்கரையின் ஒருபுறத்தே பட்டுப் போன மரம் ஒன்று. அதன் கிளையிலே ஒரு கொக்கு! அதுவும் பறவைதான்! அதுவும் இரைக்காகத்தான் காத்திருக்கின்றது! ஆனால் அது தலையைத் திருப்பி நான்கு புறங்களும் பார்க்கவில்லை! மரக்கிளையில் அலகு தீட்டவில்லை! சிறகடித்துப் பரபரக்கவில்லை! கூட்டம் சேர்த்துக் கூத்தாடவில்லை! குரல் கொடுத்துத் தன் இருப்பை அறிவிக்கவில்லை! ஆம்! செத்தது போலத்தான் அதன் இருப்பு இருக்கின்றது வெகு நேரமாக!

திடீரென்று அதன் இறகுகள் விரிகின்றன! மரம் அசைகின்றது! கண்ணிமைக்கும் நேரத்துள் கடலில் குதித்து வேட்டையாடிக் கொண்டு திரும்பவும் மரத்துக்கு வருகின்றது அது! இப்பொழுது அதன் அலகிலே திரட்சியான ஒரு மீன்! காலில் அதைப் பற்றிக் கொண்டு அங்கும் இங்கும் பார்க்கின்றது வெற்றிப் பெருமிதத் தோடு!

இந்தக் காட்சியை வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் திருவள்ளுவர். இந்தக் கொக்கிடம் இருந்து மனித சமுதாயம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் ஒன்று இருக்கின்றதே! மீனைப் பிடிக்காத போது எவ்வளவு அமைதியாக இருந்தது இந்தக் கொக்கு? பின்பு மீனைக் கண்டதும் எவ்வளவு விரைவாகவும் தப்பிப் போகவிடாமலும் பிடித்துக் கொண்டது?

ஓ! மனிதர்களாகிய நாங்களும் செயலில் இறங்காத போது இந்தக் கொக்குப் போல அமைதியாக இருந்து கொள்ள வேண்டும்! செயலில் இறங்குகின்ற நேரம் வந்ததும் விரைவாகவும் தவற விடாமலும் செய்து முடிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்! ஒரு செயலுக்குக் கால நேரம் அமையும் முன்னர் படபடத்துக் காரியத்தைச் சிதறடித்து விடக்கூடாது! இதைக் காலம் அறிதலிலே நான் குறளாக சேர்க்க வேண்டும்!

கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்று அதன்

குத்து ஒக்க சீர்த்த இடத்து!

கூம்பும் பருவத்து... ஒரு செயலைச் செய்யாதிருக்கின்ற வேளையில்: கொக்கு ஒக்க... கொக்கு இருப்பது போல அமைதியாக இருங்கள்: மற்று சீர்த்த இடத்து...மற்றப்படி அதனைச் செய்ய வேண்டிய வேளை வந்து விட்டால்: அதன் குத்து ஒக்க... அது மீனை எப்படித் தப்பவிடாமல் குத்திப் பிடிக்குமோ அது போல விரைந்து செய்து முடியுங்கள்!

ஒரு செயலைச் செய்யாதிருக்கின்ற வேளையில் கொக்கு இருப்பது போல அமைதியாக இருங்கள்! மற்றப்படி அதனைச் செய்யவேண்டிய வேளை வந்துவிட்டால் அது எப்படி மீனைத் தப்பவிடாமல் குத்திப் பிடிக்குமோ அது போல வரைந்து செய்து முடியுங்கள்!

திருக்குறள் - காலம் அறிதல்

என் எண்ணத்தில் இருந்து...

# மௌனித்த தமிழர்களும் மெல்ல மௌனித்த கனடியத் தமிழ்ச் சங்கங்களும்!

நமு பொன்னம்பலம்



அகதி மனுக்களின் தள்ளுபடிகள் விகிதாசாரத்தில் அதிகரித்து வரும் இக் காலத்தில் நமது அகதி நிலையாளர்களின் நிலைமை இனி வரும் காலங்களில் மேலும் வலுவிழக்க உள்ளது. இந்த நிலைமைகள் நீடிக்கும் பட்சத்தில் அகதி நிலையாளர்களின் எதிர்காலம் நம்பிக்கைக்கு உரியதாக கனடாவில் தென்படவில்லை.

கனடிய அகதி நிலைமைகள் தொடர்பான சட்டங்கள் மாற்றங்கண்டதன் பின்னர் தாய் நாடுகளுக்கு திரும்பிச் செல்ல வேண்டிய அகதிகளின் தொகையும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலைமையினை கருத்தில் கொண்டு புதிய அகதிகளுக்கு ஆலோசனை வழங்க "தமிழ் சங்கங்கள்" குழுமங்கள் விழிக்கின்றன.

கடந்த காலங்களில் கனடிய மத்திய அரசின் செயல்பாடுகளை ஆதரித்து வந்த "தமிழ்ப் பெரியார்கள்" மெல்ல அகதிகள் விடயத்தில் மௌனித்து வருவது நகைப்பிற்குரியது. ஏன் எனில் இந்த அரசின் செயல்பாடுகளை கடந்த காலங்களில் ஆதரித்து வந்த இந்தப் பெரிய மனிதர்கள் எங்கே காணாமல் போனார்கள் என்பதே எமது ஏக்கமாகும்.

அகதிகளுக்கு முன்னால் உள்ள தடைகள் என்ன என்பதை நாம் விளங்கிக்கொள்வது மிகச் சிறந்தது. அகதிகள் இந்த நாட்டிற்குள் நுழைந்த பின்னர் அவர்களது அகதி நிலை மனு மீதான விசாரணையில் தோல்வியுறும் பட்சத்தில் அவர்களுக்கு மறுபரிசீலனைக்கு வாய்ப்புண்டு. இது அகதிகள் சபையின் முடிவுகளை நீதிமன்றிற்கு எடுத்துச் செல்ல வாய்ப்பளிக்கும். இதுவும் தோல்வியுறும் பட்சத்தில் அகதிக் கோரிக்கையாளர் குடிவரவுத் துறை சார்ந்த அடுத்த கட்ட நிலைமைக்கு காத்திருக்க வேண்டும். அடிப்படையில் அடுத்து வரும் கட்டம் நாட்டை விட்டு வெளி ஏற்றப்பட வேண்டிய திகதியை நோக்கி காத்திருக்க வேண்டிய காலமாய் இது அமையும்.

இக்காலத்தில் அகதிச் சபையின் முடிவுகள் வெளிவந்த திகதியில் இருந்து ஒரு வருட காலம் நிறைவு பெற்றால் ஓர் அகதி நிலையாளருக்கு PRRA என்ற இன்னுமோர் மனுவுக்கு இந்தக் கால தாமதம் வாய்ப்பளிக்கும். ஆனாலும் புதிய குடிவரவு நடைமுறையில் ஒரு வருடம் என்ற கால தாமதம் கிடைப்பது நடைமுறை சாத்தியமற்றது. இதற்கு மேல் இவ்வளவு காலமும் அகதி நிலையாளருக்கு சட்டத்தின் மூலம் கிடைத்து வந்த மனிதாபிமான மனுவும் இனிமேல் குறிப்பிட்ட ஒரு வருட காலத்தின் பின்னரே சாத்தியப்படும். முதலாவது கட்டத்தில் தோல்வியுறும் ஓர் அகதி மேற்கொண்டு ஒரு வருட காலம் கனடாவில் தங்குவது சாத்தியமற்ற நிலையில் மனிதாபிமான மனுவும் சாத்தியமற்றதாகின்றது.

இவ்வாறான சட்டச் சீர்திருத்தத்தை இதனைக் கொண்டு வந்த இந்த அரசை ஆதரிக்கின்ற "தமிழ்ப் பெருமக்கள்" மறுமுனையில் இலங்கையில் அரசியல் ரீதியாக அமைதி ஏற்படவில்லை என்று கூறுவது உண்மையானால் எவ்வகையில் இந்த சட்ட மூலமும் சீர்திருத்தமும் கனடாவில் எம்மைபோன்ற அகதிகளை எதிர்காலத்தில் காக்கும் என்பதை உலகுக்கு கூறட்டும்.

கனடாவில் உண்மையான அரசியலை பேச நம்மவர்கள் முன்வரட்டும். "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்!" என்ற பதத்திற்கு ஏற்ப நாம் முரண்பாடுகளின் மொத்த உருவமாய் ஓர் அரசியலை வளர்க்க முற்படுவது நன்றல்ல. எதிர்காலச் சந்ததியை நாம் கனேடியர்களாக மாற்ற முன்வருவோம். தனியே தமிழ் மொழியில் ஒன்றும் கனடியர்களுக்கு ஒன்றுமாய் இரு மொழியில் பேசாமல் ஒரே மொழி பேசும் மக்களாய் வாழ்வு பெறுவோம்.

கடந்த காலங்களில் கனடிய மத்திய அரசின் செயல்பாடுகளை ஆதரித்து வந்த "தமிழ்ப் பெரியார்கள்" மெல்ல அகதிகள் விடயத்தில் மௌனித்து வருவது நகைப்பிற்குரியது.



**தனித்து நிற்கும் விளம்பரங்கள் வாசகர் கண்களில் படும்!**

தாயகத்திலிருந்து எமது செய்தியாளரின் நேரடிச் செய்திகள், சிந்தைக்கு இன்பம் தரும் சுவாரஷ்யமான ஆக்கங்களின் நடுவே

உங்கள் விளம்பரம்!

உங்கள் சேவைகள், விற்பனைப் பொருட்கள் எதுவாயினும்

பூபாளம் வார இதழில் விளம்பரம் செய்யுங்கள்!

416 284 4004

**உங்கள் முக்கிய ஆவணங்ளையும் படங்களையும் மிகவும் மலிவு விலையில் லமினேட் செய்து கொள்ள...**

**Palm Print**

1345 Morningside Ave #8

## ஒன்பதாம் நம்பர்...

பாஷுனும் சேர்ந்ததும், தொல்லை தொடங்கும். பிள்ளைகளுக்கு எந்த விதமான காரண, காரியமும் இல்லாத, எந்த அர்த்தமும் இல்லாத பெயர்கள் தோன்றும்.

இதெல்லாம் இந்த ஒன்பதாம் நம்பர் படுத்தும் பாடு. பிறந்த தேதி என்னவோ, அதன் பலன் என்னவோ, ஒன்பதாம் நம்பரில் பெயர் வைத்தால் சகல துன்பங்களும் நீங்கி சகல சௌபாக்கியங்களும் செல்வங்களும் புகழும் நிறைந்து பிள்ளைகள் எல்லாம் சாதனை படைக்கும் என்ற எண்ணம்.

சும்மா போங்கய்யா, கியூறியஸ் கூட ஒன்பதாம் நம்பர் தான். என்னத்தை அப்படிக் கிழிச்சிருக்கிறான்?

ஏதோ கேட்டையில் பிறந்தவன் கோட்டையைப் பிடிப்பான் என்ற கதை மாதிரி! கடைசியில் ஒற்றைக் கொம்பில் தான் முடிந்தது!

இப்படியாகப் பெயர் வைக்கும் கூத்து இங்கே ஒரு இருபத்தைந்து வருடமாகத் தான் நடக்கிறது. இதில் எண் சோதிடப்படி, பெயரைத் திரித்து அதிர்ஷ்டப் பெயரில் தொடங்கப்பட்ட பலசரக்குக் கடை சுப்பர்மார்க்கட்டுகள் எதுவுமே இன்றைக்கு இல்லை. அவ்வப்போது புதிதாக முளைப்பனவும் மழைக் காளான்கள் போலத் தலை மறைவாகின்றன. இதில் எதுவுமே கனடிய சுப்பர்மார்க்கட் தொடர் கணக்கில் வளர்ந்ததாயும் வரலாறு இல்லை.

நீண்ட நாளைக்கு முன்னால், யாழ்ப்பாணத்தில் ஒரு சிறிய எண் சோதிடப் புத்தகம் வந்தது. எண்பது ரூபாய்க்கு விற்ற சேதுராமன் புத்தகத்தைச் சுருக்கி, வங்கியில் வேலைபார்த்த எண்சோதிடர் ஒருவர் எழுதி மலிவாக விற்றிருந்தார். அவரும் தானும் தனது பெயரை மாற்றியதைப் பற்றியும் எழுதியிருந்தார். பின்னாளில் கனடாவில் உணவகம் ஒன்றில் வேலை செய்த தமிழர் ஒருவர் வேற்றினத்தவரால் தாக்கப்பட்டதாக ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. வந்து சில நாளில் இவர் சமூக உதவிப் பணமும் எடுத்துக் கொண்டு வேலையும் செய்த விவகாரமும் வெளியில் வந்தது. கியூறியஸ்குப் பலத்த சந்தேகம்... அந்த எண் சோதிட ஆசிரியரும் இந்தத் தமிழரும் ஒரே ஆள் என்பது. இருவருக்கும் ஒரே பெயர் காரணம் மட்டுமல்ல, வேறு பின்னணிகளும் உண்டு. அவரும் பெயரை மாற்றியதால் புகழ் பெற்றாரோ என்னவோ?

ஆனால், என்னவோ இந்த இருபத்தைந்து வருடங்களாக இங்கே பிறந்து அதிர்ஷ்ட எண்பார்த்துப்பெயர் வைத்த பல இளந்தலைமுறையினர் இன்று பெரும் பணமும் புகழும் பெற்று விளங்குகின்றனர்.

கிறடிட் காட் மோசடியில் பணமும் பெற்று, அடிக்கடி பொலிசாரால் கைது செய்யப்பட்டு பத்திரிகையில் பெயர் வந்து பிரபலமாகும் அளவுக்கு புகழும் பெற்று விளங்குகின்றனர். இவர்களை உழைக்காமலேயே பொருள் சம்பாதிப்பவர்களாயும், சாதனை எதுவும் படைக்காமலேயே புகழ் பெறுவர்களாயும் ஆக்கியிருப்பது இவர்களை ஈன்றோர் முற்பிறவியில் செய்த தவப்பயனும் எண் சோதிடமும் அன்றி வேறேது.

அங்கே தேசியத் தலைவரை விசுவசித்த ஒரு தலைமுறை எதிர்காலமே இல்லாமல் யுத்தத்தில் அழிந்தாலும், இங்கே தன்னை நம்பிய இன்னொரு தலைமுறையை செல்வமும் புகழும் நிறைய வைத்த எண் சோதிடத்திற்கும் பண்டிட்டிற்கும் ஈழத்தமிழினம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

எனவே, இனிமேல் மற்றத் தமிழர்களும் சேதுராமன் புத்தகத்தை போட்டோக்கொப்பி அடித்து தங்கள் பிள்ளைகளுக்கு ஒன்பதாம் நம்பரில் பெயரும் வைத்து...

அடுத்தடுத்த தலைமுறைகளும் பல்'கலை'யும் கற்று சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழினத்திற்கு பெருமை சேர்ப்பார்களாக. ■

# ஒன்பதாம் நம்பர் படுத்தும் பாடு

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

*சும்மா போங்கய்யா, கியூறியஸ் கூட ஒன்பதாம் நம்பர் தான். என்னத்தை அப்படிக் கிழிச்சிருக்கிறான்?*

*ஏதோ கேட்டையில் பிறந்தவன் கோட்டையைப் பிடிப்பான் என்ற கதை மாதிரி! கடைசியில் ஒற்றைக் கொம்பில் தான் முடிந்தது!*

ஈழத்தமிழர்களின் சிந்தனையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களை தன்னுடைய கருத்துக்களின் மீது முழுமையான நம்பிக்கை வைத்து, முழு இனத்தையுமே தன்னைப் பின் தொடர வைத்தவர் யார் என்று கேட்டால், நீங்கள் எல்லோருமே சொல்வீர்கள், அது எங்கள் மேதகு தேசியத் தலைவர் அவர்கள் தான் என்று.

கியூறியஸ்க்குத் தான் ஊரோடு ஒத்தோடும் பழக்கமோ, கும்பலோடு கோவிந்தா போடும் பழக்கமோ இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

அது தேசியத் தலைவர் அல்ல, பண்டிட் சேதுராமன்!

முழு ஈழத்தமிழ் இனத்தையுமே கண்மூடித்தனமான விசுவாசத்துடன் தன்னைப் பின்தொடர வைத்த பெருமை பண்டிட் சேதுராமனுக்குத் தான் உண்டு.

உங்களில் பலருக்கும் அவரைத் தெரிந்திருக்க நியாயமில்லை. இன்று பிள்ளைக்கோ, கடைக்கோ பெயர் வைப்பதாயின் ஈழத்தமிழன் முதலில் அணுகுவது எண் சோதிடரைத் தான். இந்த எண் சோதிடர்கள் எல்லாம் நிபுணர்களானது, இந்த பண்டிட் எழுதிய எண் சோதிடப் புத்தகத்தை வைத்துத் தான்.

எழுபதுகளில் வந்த இந்தப் புத்தகம் ஈழத்தமிழர்களிடம் இதுவரை பல்லாயிரக்கணக்கான பிரதிகள் போய்ச் சேர்ந்திருக்கின்றன.

போட்டோக்கொப்பி தான்! பின்னே என்ன தமிழன் அந்த விலைக்குப் புத்தகம் வாங்கியா படிப்பான்? அப்படி வாங்க வைப்பதாயின் நீங்கள் வெளியீட்டு விழா நடத்தி, பணச்சடங்கு வைத்தால் தான் உண்டு.

தமிழ் புத்தக வரலாற்றிலேயே அதிகம் போட்டோக்கொப்பி எடுக்கப்பட்ட புத்தகம் என்ற பெருமை அதற்குத் தான் உண்டு. இப்படியாகத்தானே அந்தப் புத்தகத்தைப் படித்த பலரும் அதில் நிபுணர்கள் ஆகி விட்டனர்.

இன்றைக்கும், நாற்பத்தைந்து வரைக்கும் கன்னி கழியாமல் இருக்கும் எந்த ஆடவனிடமும் போய், ஒரு பெண் இருக்கிறாள் என்று சொன்னால் முதல் கேட்பான், என்ன நம்பர் என்று தான். அதற்குப் பின்னால் தான் சாதி என்ன என்ற கேள்வி இருக்கும்.

'ஆறாம் நம்பரோ, அட அவள் எல்லாரோடையும் நல்லா மூவ் பண்ணுவாள், பிறகு ஆரோடையும் ஓடிப் போனால்...'




அண்ணாச்சி காலம் பூராக கன்னியாகவே இருப்பதற்கு இந்த பண்டிட்ஜி தான் காரணம்.

இன்ன திகதியில் பிறந்தால் இன்ன இயல்பு இருக்கும் என்ற முழுமையான விசுவாசத்தோடு நம்புகிற ஒரு சமயப் புத்தகமாகத் தான் இந்த சேதுராமனின் எண் சோதிடம் மாறியிருக்கிறது.

எண் சோதிடம் என்பது ஒன்றும் சேதுராமன் கண்டுபிடித்தது அல்ல. மகாபாரதத்தில் ஒரு பஞ்சபாண்டவன் சோதிடன் என்றும், அவனுக்கு எண் சோதிடம் தெரியும் என்றும் கூறப்படுகிறது. அவனும் தேசியத் தலைவர் மாதிரி அதிட்ட தேதி பார்த்துத் தான் தாக்குதல்கள்... சே... யுத்தம் செய்ய திகதி குறித்தான்.

ஏற்கனவே பல்வேறு பண்டைய கலாசாரங்களில் பாவிக்கப் பட்டிருந்தாலும், மேற்குலகில் செய்ரோ எனப்படும் ஐரிஷ்காரரர் மூலமாக இது புகழ் பெற்றது. செய்ரோ இந்தியா சென்று சோதிடர்களுடன் தங்கி சோதிடத்தைக் கற்று, ஐரோப்பாவிலும் ஹொலிவூட்டிலும் பிரபலங்களுக்கு கைரேகை, சோதிடம் பார்த்தவர். இவர் எண் சோதிடம் பற்றி ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். இவரது முறைப்படி, ஆங்கில எண் சோதிடத்தில் ஆங்கில அகர வரிசைக்கு ஒன்றிலிருந்து இலக்கமிடத் தொடங்கி, ஒன்பதை அடைந்ததும் மீண்டும் ஒன்றிலிருந்து தொடங்கியே எழுத்துக்களுக்கு இலக்கம் இடப்பட்டது.

சில எண்களினதும் திகதிகளினதும் அதிஷ்டத்தன்மை என்பதில் பல்வேறு ஐதீகங்கள் உள்ளன. 13ம் இலக்கம் துரதிஷ்டமானது என்பது மேற்கத்திய நம்பிக்கை. 13 இலக்க மாடிகளும் வீடுகளும் விரும்பத் தகாதன. அப்போலோ 13 ல் நடந்த விபத்துப் பற்றி பலரும் எண் சோதிடத்தையே உதாரணம் காட்டுவர். 13ம் திகதி வெள்ளிக்கிழமையில் வந்தால், தொலைக்காட்சி செய்தியில் அதைப் பற்றி ஆய்வே வரும்.

666 என்பது பைபிளில் சாத்தானைக் குறிப்பது என்றும் அமெரிக்காவில் உள்ள 66ம் இலக்க பெருந்தெருவின் அதிகம் விபத்து நடக்க சாத்தான் காரணம் என்றும் நம்புவோர் உள்ளனர்.

இலக்கம் 7 அதிட்டத்தோடு சம்பந்தப்படுத்தப்பட்டது.

சீனர்களுக்கு இலக்கம் நான்கைக் குறிக்கும் சொல் தான் மரணத்தையும் குறிப்பதால் அதை அவர்கள் தவிர்ப்பர். எட்டு அவர்களுக்கு அதிட்ட எண்.

பிரேமதாசாவும் எண் சோதிடம் பார்த்து, சிறிலங்காவை ஷ்றி லங்காவாக்கப் போய் ஒரு வாரத்திற்குள் குண்டு வெடிப்பில் இறந்தார்.

*பிறந்த திகதி ஒன்பதாக இருந்தால் சாதனை படைப்பான் என்பதற்காக, தாயின் வயிற்றைக் கிழித்து பிள்ளையை ஒன்பதாம் திகதி பிறக்க வைக்கலாமா என்று யோசித்தவர்களும் உண்டு. ஊசி போட்டு வேகமாக்கலாமா என்று டாக்டர்களை விசாரித்தவர்களும் உண்டு. 'என்னடா, இவள் சொல்லச் சொல்ல முக்குறாள் இல்லை' என்று மனைவியைத் திட்டியவர்களும் உண்டு.*

பிரச்சனை என்னவெனில் சேதுராமனும் சீனர்களும் மற்ற எல்லா வகை எண் சோதிடர்களும் அதிட்ட எண், துரதிஷ்ட எண் எது என்பதில் ஒரே கருத்தோடு இல்லை.

சேதுராமன் இராணுவத்தில் பணி புரிந்தவர். தனக்கு அம்மாள் அருள் கிடைத்தே இந்த வித்தையைக் கண்டறிந்ததாகத் தான் தெரிவிக்கிறார். இவர் ஆங்கில எழுத்துக்களுக்கு வழங்கிய இலக்கங்கள் வித்தியாசமானவை. அருள் கொடுத்த அம்மாள் சில நேரம் ஆங்கில அம்மாளாக இருக்கக் கூடும். அதனால் தான் தமிழ் எழுத்துக்களுக்கு அம்மாள் இலக்கமும் பலனும் கொடுக்கவில்லை.

பிறந்த திகதியும், அதன் மாத வருடக் கூட்டுத் தொகையும், பெயரில் உள்ள எழுத்துக்களுக்கான இலக்கங்களின் கூட்டுத் தொகையும் மனிதர்களின் இயல்புக்கான காரணங்கள் என்றும் பெயரை மாற்றுவதன் மூலம் துன்பங்கள் நீங்கி இன்பமும் செல்வமும் பெருகும் என்பது தான் சேதுராமனின் தத்துவம். அங்கே தொடங்கியது தான் இந்த புதிய தலையிடி.

இதில் உண்மை, பொய் எது என்பது பற்றி கியூறியஸ்க்கு பிரச்சனை இல்லை. ஆனால் இந்த புதிய வேதாகமத்தை முழுமையாக விசுவசித்து நடத்தும் கூத்துத் தான் தாங்க முடியவில்லை. சேதுராமன் சொன்னது பெயரை மாற்றும்படிதான். அதற்காக ஆங்கிலத்தை மாற்றும்படி சொன்னதில்லை. ஆனால் மூலைக்கு மூலை கிளம்பிய சோதிடக் கலாநிதிகள் ஆங்கிலத்திலேயே கை வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

நம்மாட்கள் பெயரைச் சரியாக்க முடியாவிட்டால் அதனோடு வரும் ஆங்கில வார்த்தைகளையே மாற்றுகிறார்கள். கடைக்குப் பெயர் வைக்கும்போது வைரவர் மீற் மார்க்கட் என்ற பெயராயின் ஆட்டிறைச்சி வாங்குவோரின் ஒரே தெரிவாக இருக்க வேண்டுமாயின், வைரவரின் பெயரை நீங்கள் மாற்றலாம். மீற் மார்க்கட்டில் கை வைக்க முடியாது. ஆனால் நம்மாளுகள் ஆங்கிலச் சொற்களையே மாற்றப் போக, கடைக்கு வரும் அடுத்த இனத்தவர் தலையைச் சொறிய வேண்டி ஏற்படுகிறது. (வைரவர் ஆட்டிறைச்சி மீட் மார்க்கட்டுக்கான முழுமையான காப்புரிமமும் கியூறியஸ்க்கே உரியது. பெயரில் எழுத்துக்களை மாற்றி போட்டோக் கொப்பி மோசடி செய்ய முயல்வோர், கனடிய நீதிமன்றங்களில் எண் சோதிடம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதை இத்தால் அறியக் கடவீர்!)

ஆனால் சில கடைகளைப் பார்க்கும் போது, பெயர் மாற்றத்திற்கு எண் சோதிடம் காரணமில்லை என்பது தெரியும். அண்ணாச்சி கடை பெயரில் கடன் வாங்கி வங்குரோத்தா(க்)கி, தற்போது அதே கடையை அதே பெயரில் வேறு எழுத்துக்களுடன் கொண்டு வந்திருக்கிறார் என்பது புலனாகும்.

இந்த எண் சோதிடம் தமிழ்நாட்டில் பெரிதாக கைக்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. ஆளாளுக்குப் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர் தான் வைக்கிறார்கள். ஈழத்திலும் இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் புலன் பெயர்ந்த தமிழன் தான் இதைப் படாத பாடு படுத்துகிறான்.

பிறந்த திகதி ஒன்பதாக இருந்தால் சாதனை படைப்பான் என்பதற்காக, தாயின் வயிற்றைக் கிழித்து பிள்ளையை ஒன்பதாம் திகதி பிறக்க வைக்கலாமா என்று யோசித்தவர்களும் உண்டு. ஊசி போட்டு வேகமாக்கலாமா என்று டாக்டர்களை விசாரித்தவர்களும் உண்டு. 'என்னடா, இவள் சொல்லச் சொல்ல முக்குறாள் இல்லை' என்று மனைவியைத் திட்டியவர்களும் உண்டு.

சரி, பிள்ளை தான் பிறந்து விட்டது. அதன் பின்னால் பெயர் வைக்கும் படலம் ஆரம்பமானதும் தான் தொடங்கும் கூத்து. நிபந்தனைகள் ஒவ்வொன்றாக வரும். பெயர் இன்ன எழுத்தில் தான் தொடங்க வேண்டும் என்று சாத்திரியார் சொல்வார். இத்தனை எழுத்தில் இருக்க வேண்டும் என்று நிபந்தனை வரும். பிறந்த தேதி, கூட்டெண் எல்லாம் பார்த்து, பெயர் வைக்கத் தொடங்க இந்த விதிமுறைகளுக்குள் அடங்கும் எந்தத் தமிழ்ப் பெயரும் கிடைக்காது.

அதற்குள் பிள்ளைகளுக்குப் பெயர் ஷன், ஷா, ஜன், ஜா என்றான விகுதிகளில் முடிய வேண்டும் என்ற

14ம் பக்கம்...

## யுத்தம் முடிந்த பின்பும் இராணுவம் வளர்கிறது

### வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு அதிகளவு பணம் ஒதுக்கீடு

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் 2013 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் கடந்த செவ்வாய்க் கிழமை (09.12.2012) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டடுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான உத்தேச மொத்தச் செலவீனம் 1,33,500 கோடி ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.*

*இச் செலவினத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்காக 28,950 கோடியே 25 இலட்சத்து 34 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவினம் கடந்த வருடத்தினை விட 5071 கோடி ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்புச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த வருடத்தினை விட 5825 கோடி ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபாலடி சில்வா அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில், 2013 ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவினங்கள் 185 தலைப்புகளில் செலவிட மதிப்பிடப்பட்டுள்ளது.*

*ஜனாதிபதி செலவினம் 1352 கோடியே 65 இலட்சத்து ஆயிரம் ரூபாவாகும். பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 28,905 கோடி ரூபா ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் இராணுவத்திற்கு 12,216 கோடியும், கடற்படைக்கு 4,266 கோடியும், விமானப்படைக்கு 4,152 கோடியும், பொலிஸ் திணைக்களத்திற்கு 4,075 கோடியும் மிகுதி ஏனைய துறைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.*

*பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 8890 கோடி ரூபாவும், நிதியமைச்சுக்கு 8764 கோடியும், கல்வியமைச்சுக்கு 3,792 கோடியும், உயர் கல்வி அமைச்சுக்கு 2,790 கோடியும், மீள் குடியேற்ற அமைச்சுக்கு 43 கோடியும் ஒதுக்கிடப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு 13,279 கோடி ஒதுக்கிடப்பட்டுள்ளது. அதே வேளை சிறைச்சாலைகள் அமைச்சுக்கு 532 கோடி ரூபா ஒதுக்கிடப்பட்டுள்ளது.*

*இவற்றை விட, பௌத்த மத அலுவல்கள் அமைச்சுக்கு 182 கோடியே 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பௌத்த மதத்திற்கு 60 கோடியும், இந்து சமயத்திற்கு 18 கோடியும், முஸ்லிம் சமயத்துக்கு 18 கோடியும் கிறிஸ்தவ சமயத்திற்கு 11 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.*

## நோர்வேயில் உள்ள சிறுவர் காப்பகம் தவறு செய்து விட்டது!

*நோர்வேயின் சிறுவர்நல விவகார அமைச்சர்* Inge Marte Torkelsen *அவர்கள் தமது துறையை சார்ந்த சிறுவர் காப்பகம் வெளிநாட்டு சிறார்களை பராமரிப்பதில் போதிய அனுபவத்தை கொண்டிருக்கவில்லை என கவலை வெளியிட்டார்.*

*நோர்வேயிலுள்ள சிறுவர் காப்பகத்தில் சில தவறுகள் இடம்பெற்றுள்ளன என்பதே உண்மை என்றும் அந்நாட்டு அமைச்சர் தெரிவித்தார்.*

*இது பற்றி செய்தி வெளியிட்ட நோர்வே பத்திரிகை ஒன்று அமைச்சரின் செவ்வியை பிரசுரித்திருந்தது. இலங்கை சிறுவர்கள் சிலர் பெற்றோரால் தகாத முறையில் நடாத்தப்படுவதாகக் கூறி பிள்ளைகளை இச் சிறுவர் காப்பகம் பொறுப்பு எடுத்ததும் இது சர்வதேச ரீதியில் ஊடகங்களில் செய்தியானதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்..*

## இந்த வாரம் boobalam.com இல்...

*யாழ்ப்பாணத்தில் நிலங்களைக் கைப்பற்றும் இராணுவத்தினர்*

*நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல்*

*பௌத்தர்களுக்கு எதிரான செயற்பாடுகள் இலங்கையிலும் நடக்கின்றன*

**கூடங்குளம் அணுமின் நிலையம் எங்கள் கோடிக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்துமா?**

*சிவா ஈஸ்வரமூர்த்தியின் சிறப்புக் கட்டுரை*

**பூபாளம் இதழ்களை நீங்கள் இப்போது எங்கள் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.**

